க்கங்கள் : எட்டு

Re[illegible] Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

டர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 16 புதன்கிழமை (01.08.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 245

# கிழக்கில் தமது பணிகளை இடைநிறுத்த பல தொண்டு நிறுவனங்கள் யோசனை

## இறுக்கமடைந்துவரும் கெடுபிடிகள் காரணமாக

கொழும்பு,ஓகஸ்ட் 01

கிழக்கு மாகாணத்தில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டு வரும் சர்வதேச மற்றும் உள்ளூர் சார்பற்ற நிறுவனங்களுக்கு எதிரான கெடுபிடிகள் தீவிரமுற்று இறுக்கமடைந்திருப்பதை அடுத்து, அமைப்புகள் பலவும் கிழக்கில் தங்களது பணிகளை இடைநிறுத்துவது குறித்து ஆலோசித்து ன்றன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

ழக்கு மாகாணத்தை இலங்கை அரச கள் முழுமையாக மீட்டு தமது கட் பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளன று அறிவிக்கப்பட்டுள்ள பின்னணி தொண்டர் அமைப்புகளுக்கு எதிரான டுபிடிகள், கட்டுப்பாடுகள், நெருக்கு ங்கள் என்பன படையினராலும், துணை ணுவக் குழுக்களினாலும் தீவிரப்படுத் பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்

துணை இராணுவக் குழு ஒன்றின் அச்சு தலைத் தொடர்ந்து 'உலக தரிசனம்' சர்வதேச அமைப்பு மட்டக்களப்பில் மனிதாபிமானப் பணிகளை ஒருவாரம் நிறுத்திய பின்னர் மீண்டும் ஆரம் ள்ளது. அது தற்போது நிலைமை குறித்துத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

தொண்டர் அமைப்புகள் தங்களின் விவரங்கள், செயற்பாட்டாளர்களின் பெயர் மற்றும் விலாசம் அடங்கிய விவரங்கள், அலுவலகங்கள், செயற்றிட்டங்கள் போன்றவற்றை விளக்கமாகத் தெரியப்படுத்தவேண்டும் என உத்தர விடும் கட்டளைக் கடிதங்கள் துணை இராணுவக் குழுவாகச் செயற்படும் தமிழ் ஆயுதஇயக்கம் ஒன்றினால் கிழக்கில் உள்ள தொண்டர்

(08ஆம் பக்கம் பார்க்க)

**ர்ளே 05 ஆம் பக்கத்தில்**

*ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் 1*

## இராணுவத்தளபதி குடாநாட்டுக்கு விஜயம்

குடாநாட்டின் பாதுகாப்பு நிலைமையை ஆராய்வதற்காக இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சரத்பொன்சேகா நேற்று யாழ்ப்பாணத்துக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலி சென்ற இராணுவத் தளபதியை யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஜி.ஏ. சந்திரசிறி வரவேற்றார்.

அதனையடுத்து பலாலி பாதுகாப்பு தலைமையக கட்டடத்தில் குடாநாட்டில்

(08ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் தேர்தல் நடத்த முயன்றால் இரத்தக்களரியா? புலிகளின் எச்சரிக்கைக்கு இலங்கை அரசு ஆட்சேபம்

## 'சுடர் ஒளி' செய்தி குறித்து இணைத் தலைமைகளுக்குக் கடிதம்

கொழும்பு,ஓக.1

''கிழக்கில் தேர்தல் நடத்த முற்பட்டால் இரத்தக்களரி ஏற்படும்'' என்று எச்சரிக்கும் விதத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் கூறினார் என்று வெளியான செய்திகள் தொடர்பாக இலங்கை அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க நோர்வே உள்ளிட்ட இணைத்தலைமை நாடுகளுக்கு ஆட்சேபக்கடிதம் ஒன்றை அனுப்பிவைத்திருக்கின்றார்.

''கிழக்கில் தேர்தல் நடந்தால் இரத்தக்களறி ஏற்படும்'' என இளந்திரையன் எச்சரித்துள்ளார் என்ற செய்தி 'சுடர் ஒளி' தமிழ்ப் பத்திரிகையின் 26ஆம் திகதி இதழில் பிரசுரமாகியிருப்பதை பேராசிரியர் ரஜீவ விஜேயசிங்க நேற்று முன்தினம் தாம் எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கின்றார். அந்தக் கடிதத்தின் சாராம்சம் வருமாறு:-

'சுடர் ஒளி'யில் பிரசுரமான அந்த எச்சரிக்கை புலிகளின் இராணுவப் பேச்சாளரிடமிருந்து

(08ஆம் பக்கம் பார்க்க)

# தலாம் தரத்துக்குப் பிள்ளைகளை அனுமதிப்பதற்கான விதிமுறைகள்

## யர் நீதிமன்றம் வெளியிட்ட சுற்றறிக்கை வரைவின் விவரம்

கொழும்பு,ஓக.1

ச பாடசாலைகளில் முதலாம் தரத் மாணவர்களை அனுமதிப்பது தொடர் ற்றறிக்கையின் நகல் வடிவத்தை திமன்றமே தயாரித்து முன்வைத் ன்றது.

அந்த சுற்றறிக்கைக்கு அமைய மாண ளத் தரம் ஒன்று வகுப்புக்கு அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களைப் பாடசாலைகள் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியிருக்கின்றது.

தரம் ஒன்று வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான வழக்கு ஒன்றை விசாரணை செய்ய உயர் நீதிமன்றம் இந்த அனுமதி சம்பந்தமான கல்வி அமைச்சின் சுற்றறிக்கையை நிராகரித்துத் தீர்ப்பு வழங்கியிருந்தது. அதற்கு மாற்றாக புதிய சுற்றறிக்கை ஒன்றைப் பிரேரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளரை நீதிமன்றம் கோரியிருந்தது. அதற்கு அமைய ஜனாதிபதியின் செயலாளரால் ஒரு வரைவு சுற்றறிக்கை நீதிமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அத்திட்டத்தையும்

(07ஆம் பக்கம் பார்க்க)



05.08.2007 இல்
சனி மாற்றம்
நாளை தொடக்கம்
உங்கள் இராசிக்குப் பலன்
உதயனில்

# ...தில் நேற்று இருவர் சுட்டுக் கொலை திருநெல்வேலியில் ஒருவர் சுடப்பட்டு காயம்

யாழ்ப்பாணம்,ஓக.1

யாழ்.ந ரை அண்டிய பகுதிகளில் நேற் க்கா இருவர் சுட்டுக்கொல்லப்பட்ட ர். மற்றொருவர் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

நாவலர் வீதியில் 'ஏரோ லங்கா' அலுவலகத்துக்கு முன்பாக - அன்னசத்திர ஒழுங் கைக்குச் சமீபமாக - நேற்று முற்பகல் .30 மணியளவில் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அன்னசத்திர லேன், கந்தர்மடத்தைச் சேர்ந்த ஒரு பிள் ளையின் தந்தையான ஓட்டோ சாரதி ை டிவநாதன் கஜபிரவீன் (வயது 21) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என இனங்காணப்பட்டது.

முற்பகல் 11 மணியளவில் மானிப்பாய் வீதியில் கோணாந்தோட்டம் பகுதியில் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரிடம் இருந்த அடையாள அட்டை

(08 ஆம் பக்கம் பார்க்க)

# வரணி மாசேரில் கிளைமோர் தாக்குதல்; தண்ணீர் எடுக்கச் சென்ற 3 சிப்பாய்கள் பலி

யாழ்ப்பாணம்,ஓக.1

வரணிப் படைப்பிரிவில் மாசேரி தெற்கில் நேற்றுப்பிற்பகல் 4.35 மணிக்கு இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் மூன்று படையினர் கொல்லப்பட்டனர்.

படையினர் வழமையாக தண்ணீர் அள்ளச் செல்லும் கிணற்றுக்குச் சமீபமாக விடுதலைப் புலிகள் பொருத்தியிருந்த கிளைமோர் வெடித்ததில் இவர்கள் உயிரிழந்தனர் என்று பாதுகாப்புத் தரப்புத் தெரிவித்தது.

இத்தாக்குதலை அடுத்து வரணி - கொடிகாமம் வீதி ஊடான போக்குவரத்து சில மணி நேரம் தடை செய்யப்பட்டிருந்தது.

அப்பகுதியில் படையினர் தேடுதல்களை நடத்தினர். அதனால் பதற்றம் நிலவியது.

(அ-1-5)

# குடாநாட்டில் காணாமற்போனோர் குறித்து ஜனாதிபதிக்கு அமைச்சர் டக்ளஸ் எடுத்துரைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.1

குடாநாட்டில் காணாமற்போனோர் தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று ஜனாதிபதியுடன் தொலைபேசியில் உரையாடி எடுத்துரைத்தார்.

அமைச்சு நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் காணாமற்போனவர் து உறவினர்கள் பலர் கடந்த இரு தினங் ாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை யாழ். அமைச்சு அலுவலகத்தில் வைத்துச் சந்தித்தனர்.

குடாநாட்டில் பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் இனந்தெரியாத வகையில் காணாமற்போயுள்ள தங்களது உறவினர்கள் பற்றிய விவரங்களை முன்வைத்த இம்மக்கள் அடக்க இயலாத துயரங்கள் தாளாமல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்பாகக் கதறி அழுதவண்ணம் தங்களது உறவினர்களை மீட்டுத் தரும்படி வேண்டினர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஒக்ரோபரில் புதிய மின்நிலையம் சுன்னாகத்தில் இயங்க ஆரம்பிக்கும்

## அதன் பின்னர் மின்வெட்டு இருக்காதாம்

யாழ்ப்பாணம்,ஓக.1

சீனாவைச் சேர்ந்த 'யூறோ ஏசியா' என்ற நிறுவனம் சுன்னாகத்தில் புதிய மின் நிலையத்தை அமைத்து முடித்ததும் அனேகமாக எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து மின்விநியோகம் சீராகும் என்று மின்சார சபை வட்டாரங்கள் உதயனுக்குத் தெரிவித்தன.

நாளாந்தம் 25 மெகாவாட்ஸ் மின் விநியோகத்தை மின்சார சபைக்கு வழங்கும் இலக்குடன் இந்த மின் நிலையம் அமைக்கப்படவிருக்கின்றது. இந்நிலையம் இயங்க ஆரம்பித்ததும் மின் வெட்டு இருக்காது என்று மின்சார சபை நம்பிக்கை வெளியிட்டது.

இந்த மின் நிலையத்தை நிறுவுவதற்கான ஒப்பந்தத்தில் 'யூறோ ஏசியா' நிறுவனமும் மின்சார சபையும் கைச்சாத்திட்டுள்ளன.

மின் நிலையத்தை அமைப்பதற்கான ஆரம்ப கட்டப் பணிகள் தற்சமயம் இடம் பெற்று வருகின்றன.

இதேவேளை -

புதிய மின்நிலையம் இயங்க ஆரம்பிக்கு முன்னர் மின் விநியோகத்தை ஓரளவு

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

**அமரர் துரைச்சாமி தனபாலசிங்கம் (தனம்)**



பூப்போல நீ மலர்ந்து ஆண்டு நாற்பத்
தொட்டானது
சேய் பிரிந்த தாய் போல அலமந்து
இன்று நிற்கின்றோம்
தூய உன் திருமேனி எம் கண்ணுள்
நிற்க- நீ
பாய்ந்தோடி மறந்தனையே தம்பி
ஏன்? ஏன்?
அன்பும் அரவணைப்பும் காட்டி எம்மை
அணைப்பீரே?
துன்புற்று ஏங்கி நிற்க எம்முடன்
உறவினரையும்- மறந்தீரே
மின் போன்ற மேனித்திருமுகனை மறந்தே
விண்புக நினைத்ததே ஏன் சித்தப்பா, சித்தப்பா

*அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

சகோதரன் சு.கைலாயபிள்ளை,
பெறாமகன் கை.சுகிதரன் குடும்பம் (லண்டன்),
பெறாமகன் சு.சுதாகரன் குடும்பம்.

கைதடி வடக்கு,
கைதடி.
(63084)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பும் நன்றி நவிலலும்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 10 . 10 . 1913 |  | 03 . 07 . 2007 |

**அமரர் சந்தையினார் மாப்பாணர் கந்தசாமி**

(முன்னாள் கிராம அதிகாரியும், வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான மகாசபைத் தலைவரும்)

அன்னாரின் அந்தியேட்டியும் சபிண்டீகரணக் கிரியைகளும் நாளை (02.08.2007) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆன்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்கு கொண்டவருக்கும், தந்தி மூலமும், உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், துண்டுப்பிரசுரமூலம் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் இறுதி நிகழ்வில் இறுதி அஞ்சலி உரை நிகழ்தியோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

"கௌரிஅகம்",
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
T.P.: 021 226 4139

**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.**
(63080)

# மரண அறிவித்தல்கள்

## *பொன்னர் விட்டுணுசாமி (சாமியார்)*



(ஓய்வுபெற்ற மேற்பார்வையாளர்- தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்)

தொல்புரம் மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் விட்டுணுசாமி (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2007) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நவாலி வழுக்கையாற்று இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொல்புரம் மத்தி,
சுழிபுரம்.*
(63081)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## *தம்பையா இராசா*

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் நாகர்கோவிலடியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது மகாரம்பைக் குளம், வவுனியாவில் வசித்து வந்தவருமாகிய தம்பையா இராசா 28.07.2007 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா தம்பதியரின் அன்பு மகனும் ஆறுமுகம் தம்பதியரின் அன்பு மருமகனும் அமரர் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் கோகுலதாஸ் (நிகழ்ச் சித்திட்ட உதவியாளர், கச்சேரி, வவுனியா), தருமதாஸ் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தினி (ஆசிரியர், மகாரம்பைக்குளம், பூந்தோட்டம்), யாழினி ஆகியோரின் அன்பு மாமனும் அன்னலெட்சுமி, புவனேஸ்வரி, நவரட்ணம், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29.07.2007ஞாயிற்றுக்கிழமை அன்று அவரது மகாரம்பைக்குளம் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூந்தோட்ட இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மகாரம்பைக்குளம்,
பூந்தோட்டம், வவுனியா.*
தொ.இல: *077- 3072273
060- 2240511*
(63092)

தகவல்:
**த.நவரட்ணம்,
த.திருநாவுக்கரசு**
*(சகோதரர்கள்).*

# பிரபல இந்திய பத்திரிகையாளர் காலமானார்

புதுடில்லி,ஓக.1

பிரபல இந்திய பத்திரிகையாளர் திலிப் கங்குலி தமது 57 ஆவது வயதில் காலமானார்.

அசோஸியேட்டட். பத்திரிகை நிறுவனத்தின் (ஏ.பி.) கொழும்பு பணி மனை பிரதம பத்திரிகையாளரான அவர் கடந்த ஏப்ரல் மாதம் வரை பணியாற்றியிருந்தார்.

மேற்படி நிறுவனத்தின் பத்திகையாளராக 21 வருடங்கள் பணிபுரிந்துள்ள கங்குலி, மத்திய கிழக்கு போரின் போது பக்தாத்தில் இருந்து பணியாற் றினார்.

ருவாண்டாவில் இடம்பெற்ற இனப் படுகொலைகளின் போதும் பணி யாற்றியுள்ள அவர், தென்னாசியாவில் பல பாகங்களிலும் செய்தியாளராக ஏ.பி. நிறுவனத்துக்குப் பணியாற்றியுள்ளார். (ப)

# நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஓக.1

குடாநாட்டில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதிக்கு முன்னர் இடம் பெயர்ந்த குடும்பங்கள் மற்றும் நலிவுற்ற குடும்பங்களுக்கான மே, ஜூன் மாதங்களுக்குரிய நிவாரண விநியோகத்தை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரச அதிபர் சகல பிரதேச செயலர்களைக் கேட்டுள்ளார்.

நிவாரண உச்ச எல்லை, பொருள் ஒதுக்கீடு, விநியோக அட்டவணை ஆகி யன பிரதேச செயலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

மே மாதத்திற்குரிய நிவாரணத் துக்கு அரிசி, சீனி, கோதுமை மா ஆகி யனவும் ஜூன் மாதத்துக்குரிய நிவா ரணத்துக்கு அரிசி தவிர்த்து கோதுமை மா, சீனி, வழங்கப்படும்.

இதுவரை தமக்குரிய வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக்கொள்ளாத ப.நோ.கூ. சங்கங்கள் உடன் அவற்றை மாவட்ட புனர்வாழ்வு, புரமைப்பு செயலகத் திட்டப் பணிப்பாளரிடம் பெற்று விநியோகத்தை ஆரம்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளன. (அ-1)

# காணவில்லை



**பொன்னம்பலம் நடராசா**

என்பவர் கடந்த மாதம் 03-07-2007 உறவினரின் மரணச்சடங்கில் பங்கு கொள்வதற்காக திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்தவர். இதுவரைக்கும் அவரைக்காணவில்லை. அவர் வரும்போது பிறவுண் கலர் சேட்டும், கறுப்புக்கலர் நீளக் காட் சட்டையும் அணிந்திருந்தார். (அவருக்கு வயது-61) அவரைக் கண்டவர்கள் கீழ்க் காணும் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

(63089)
தொடர்பு:
**021 226 4139, 026 222 4319**

# மரண அறிவித்தல்

## திருமதி சந்திரசேகர கனகராணி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்திரசேகர கனகராணி கடந்த ஞாயிற்றுக்கிழமை (29.07.2007) அன்று நியூசிலாந்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு. திருமதி செல்லையா தம்பதியரின் அன்பு மருமகளும் சந்திரசேகர(ஓய்வுபெற்ற நில அளவையாளர்) அவர்களின் பாசமிகு மனைவியும் தங்கராசா, கனகலிங்கம், ஜெயராஜசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரபா (கொழும்பு), சாமினி(ஆஸ்திரேலியா), கீதா (நியூசிலாந்து) நிருபா(நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சண்முகலிங்கம்(கொழும்பு), ரங்கன்(ஆஸ்திரேலியா), ரகு(நியூசிலாந்து), பிரபாகரன் (நியூசிலாந்து), ஆகியோரின் பாசமிகு மாமியும் கரணி, செல்வி, ஈசன், ஜெனனி, நிஷான், தர்சி ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.08.2007) வியாழக்கிழமை நியூசிலாந்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஆ.விஜயரத்தினம்(தம்பி)**
*39, அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.*

# சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம்

**குருபீடாதிபதி அதிவந்தனிய ஜம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார் அருளாசியுடன் நடத்தும் கருத்தரங்கு நிகழ்வு**

மேற்படி அமைப்பின் மாதாந்தக் கருத்தரங்குத் தொடர் நிகழ்வு சர்வசித்து வருடம் ஆடி மாதம் 16ஆம் நாள் இன்று(01.08.2007) புதன்கிழமை பி.ப.2 மணியளவில் பிரம்ம ஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகும்.

**இடம்: ஆனைப்பந்தி தலைமைக் காரியாலய குருகுலம்**

## நிகழ்ச்சி நிரல்

1. **மங்கள விளக்கேற்றல்**
2. **இறைவணக்கம்**
3. **வரவேற்புரை:** பிரம்மஸ்ரீ நா.பாலஸ்கந்தரூபக் குருக்கள்
4. **ஆசியுரை:** பிரம்மஸ்ரீ நா.மகாதேவ சிவாச்சாரியார் *(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்)*
5. **தலைமையுரை**
6. **சிவாகமங்களின் மகத்துவம் எனும் விடயம் பற்றிய கருத்துரை**

**வழங்குபவர்:** *யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள்பேராசிரியர்* பிரம்மஸ்ரீ ப.கோபாலகிருஷ்ண ஐயர்

**நன்றியுரை:** பிரம்மஸ்ரீ யோ.பிரபாகரக் குருக்கள்

**சமஸ்கிருத நூல்களும் வழங்கப்படும்.**

இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைத்து அந்தணக் குருமார்கள், மாணவர்கள், பெற்றோர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

*மு.குறிப்பு: தொடர்ந்து 2 மாதகாலமாக குருகுல கல்வி கற்கும் மாணவனுக்கு வெகுமதி வழங்கும் நிகழ்வும் இடம்பெறும்.*

(63079)

அனுசரனை: யாழ்.காலணியகம், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.

# கண்ணீர் அஞ்சலி

**அமரர் துரைச்சாமி தனபாலசிங்கம்**



அன்பும் பாசமுமாய்
எம்மை அரவணைப்பீர்கள்
எல்லாவற்றையும் சகஜமாய்
எடுத்து எமக்கு ஆதரவு
செய்வீர்கள்
இனி எமக்கு யார்!
என்ற ஒரு கேள்விக் குறி
ஆகி விட்டது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

கைதடி மத்தி, (63086)

**காந்தன் களஞ்சியம்,**
முகவர், தொழிலாளர்.

# மரண அறிவித்தல்



## Dr.A.V.இராசரத்தினம்

**(யாழ்.சித்த ஆயுர்வேத கல்லூரியின் முன்னாள் விரிவுரையாளரும், அதிபரும்)**

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட Dr.A.V. இராசரத்தினம் அவர்கள் 29.07.2007 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விசுவநாதர்- தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தையல்நாயகியின் அன்புக் கணவரும் தென்கோவை காலஞ்சென்ற A.V.மயில்வாகனம்(Retd.Asst.Commissioner),வள்ளியம்மை ஆகியோரின் சகோதரரும் வைத்தியநாதன், பரமேஸ்வரி, சண்முகநாதன், மகேஸ்வரி, பத்மநாதன், ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் குமாரசாமி, திலகவதி, பவாணி, ஸ்ரீபதி, அருணா ஆகியோரின் அன்பு மாமனும் யமுனா, திருலிங்கம், திலகேசன், மதிவதனி, கிரிசாந்தன், மெசேத்தே, யானகி, ஸ்ரீபிரணவேஸ்வரன், பிரசாந்தி, தாமரா ஆகியோரின் பேரனும் கஜன், குகன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக இன்று (01.08.2007) புதன்கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் காலை 9 மணி முதல் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு பி.ப. 2 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*24/10, 59ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.*
T.P. No: 4935003
(சி.53082)

தகவல்:
**குடும்பதினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

கொழும்பு, ஒக.1

தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இது விடயமாக கல்வியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்தை ஏற்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கி உள்ளது.

வடக்கு - கிழக்கில் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை இதன் மூலம் நிவர்த்திக்கலாம் என்று தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (1)

## சமய சந்நிதிகளில்

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்பாள் ஆலய வருடாந்தப்பெரும் திருவிழா இன்று புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (202)

* * *

நவாலி, ஒக.1

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய மகா கணபதிகோம சகஸ்ர கலச அபிஷேக மகா யக்ஞ பெருவிழா நாளை வியாழக்கிழமை காலை 6 மணி முதல் இடம்பெறும். (100)

* * *

யாழ்ப்பாணம், ஒக.1

சாவகச்சேரி, கச்சாய் வீதி, புனித லிகோரியார் தேவாலய திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

எதிர்வரும் சனிக்கிழமை நற்கருணை ஆராதனையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திருநாள் திருப்பலியும் திருச்சொரூப பவனியும் இடம்பெறும். (202-207)

* * *

யாழ்ப்பாணம், ஒக.1

யாழ். வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நவக்கிரக ஹோம ஆராதனை எதிர்வரும் 5ஆம் திகதி காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது. (202)

# சிறுவர் எழுத்தாளர் தெரிவுக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஒக.1

பாடசாலை சிறுவர் எழுத்தாளர் பயிற்சி செயற்றிட்டத்திற்கு சிறுவர்களை தெரிவு செய்தலுக்காக கல்வி அமைச்சின் இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச்சபை ஆக்கங்களைக் கோரியுள்ளது.

மாணவ எழுத்தாளர்களின் திறன்களை கண்டுபிடிப்பதற்கென ஜி.சீ.ஈ. (சாதாரணம்), ஜி.சீ.ஈ. (உயர்தரம்) மாணவர்கள் தமது ஆக்கங்களை பாடசாலை அதிபர்கள் மூலம் உறுதிப்படுத்தி செப்ரெம்பர் 30ஆம் திகதிக்கு முன்னர் செயலாளர், இலங்கை தேசிய நூலபிவிருத்திச் சபை, கல்வி அமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்லை, என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202-68)

# கிழக்கில் தொண்டு நிறுவனங்கள் நினைத்தவாறு செயலாற்ற முடியாது

## உயர் மட்ட இராணுவ அதிகாரி கட்டளை

கொழும்பு, ஒக.1

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளிடமிருந்து விடுவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளில் அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் சம்பந்தப்பட்டிருப்பார்களானால் அந்தப் பணிகளுக்கான திட்டங்கள் உள்ளூர் கிராமியக் குழுக்களால் அடையாளம் காணப்பட்டு, அவை மாவட்ட செயலகத்தின் அங்கீகாரம் பெற்றுள்ளனவா என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். இப்பகுதிகளில் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் முன்னர் போன்று தாம் நினைத்தவாறு செயற்பட அனுமதிக்கப்படலாகாது.

இவ்வாறு கிழக்குப் பிராந்தியக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டிய கிழக்கு மாகாணத்திலுள்ள அரச அதிகாரிகளுக்கும், உயர் மட்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்தப் பணியை முனைப்பாக செயல்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர், மாகாணச் செயலாளர் பல்வேறு இராணுவப் பிரிவுகளின் கட்டளையிடும் அதிகாரிகள், விசேட அதிரடிப்படை அதிகாரிகள், பொலிஸார் அனைவருக்குமிடையில் சிறந்த ஒருங்கிணைப்பு இருக்கவேண்டும் என்றும் மேஜர் ஜெனரல் பன்னிப்பிட்டிய தமது சுற்றறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை அரசாங்க அதிபர்களுக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர்களுக்கும் விசேட அதிரடிப்படை தளபதி, 22ஆம், 23ஆம் பிரிகேட்டுகளின் தளபதிகளுக்கும் ஏனைய முக்கிய அதிகாரிகளுக்கும் இந்த அறிக்கையின் பணிப்புரைகள் அனுப்பப்பட்டுள்ளன. (அ-ப)



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றன. யாழ். பல்கலைக்கழக சமூகவியற்துறைத் தலைவர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், அரச அதிபர் கே. கணேஷின் பாரியார் ஆகியோர் மங்கள விளக்கேற்றிவைக்கின்றார். படத்தில் அரச அதிபர் கே. கணேஸூம் ஏனைய விருந்தினர்களும் காணப்படுகின்றனர்.

# நாவற்குழி வீட்டுத் திட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை

## சமூக சேவைகள் அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 1

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் உள்ள மக்களின் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாவற்குழி 300 வீட்டுத் திட்டத்தில் வசித்து வருகின்ற மக்களின் பிரதிநிதிகள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அவரது யாழ். அலுவலகத்தில் சந்தித்துத் தாங்கள் முகங்கொடுத்துவருகின்ற பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கோரிக்கைகளை முன்வைத்தனர்.

வீட்டு உறுதிகளை வழங்குவதில் தாமதங்கள் ஏற்பட்டு வருவதாகவும், மின்சார இணைப்புக்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ள நிலையில் மின் இணைப்புக்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையில் உள்ளதாகவும், வீட்டுத் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவேண்டியிருப்பதாகவும் பிரதிநிதிகள் தங்களது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

தங்களுக்கு வழங்கப்பட்டு வந்த இடம் பெயர்ந்தவர்களுக்கான உணவு நிவாரணங்கள் இவ்வருடம் மார்ச் மாதம் வரையில் மட்டுமே வழங்கப்பட்டு தற்போது நான்கு மாதங்களாக வழங்கப்படவில்லை என்ற முறைப்பாட்டையும் முன்வைத்தனர்.

இவர்களது கோரிக்கைகள் தொடர்பில் உடனடிச் செயற்பாடுகளை மேற்கொண்ட அமைச்சர் உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு இவர்களது குறைகளைத் தீர்ப்பதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் - என்றுள்ளது. (202)

# நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக.1

தென்மராட்சிப் பிரதேச கலாசாரப் பேரவையின் கலை இலக்கிய விழா எதிர்வரும் 5ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

சாவகச்சேரியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தலைமையில் விழா நடத்தப்படவுள்ளது.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமியும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகமும் கலந்துகொள்வர்.

பிரதேச மட்டத்தில் 2005, 2006, 2007 ஆகிய ஆண்டுகளில் நடத்தப்பட்ட இலக்கியப் போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் இவ்விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (202-207)

* * *

யாழ்ப்பாணம், ஒக.1

பருத்தித்துறை மாவட்ட சாரணர் சங்கம் நடத்தும் உலக சாரணர் நூற்றாண்டு விழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம், ஒக.1

உலகப் புகழ்பெற்ற ஆன்மீகக்குரு ஸ்ரீ ரவிசங்கரின் வாழுங்கலைப்பயிற்சி வகுப்புக்கள் மீண்டும் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளன.

சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் தனித் தனியாக நடத்தப்படவுள்ள இவ்வாழுங்கலைப் பயிற்சி வகுப்புக்களில் பங்கு பற்ற விரும்புவோர் நல்லூர் ஆலய பின்புறத்தில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதேவேளை நல்லூர் கம்பன் கோட்டத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை குரு பூர்ணிமாவை முன்னிட்டு பிற்பகல் 3 மணிக்கு சத்சங்கம் எனும் கதம்ப நிகழ்வும் இடம்பெறும் என வாழுங்கலைப் பயிற்சியின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (202-79)

* * *

யாழ்ப்பாணம், ஒக.1

அறவழிப் போராட்டக் குழுவின் சிறுவர் உரிமைகள் செயற்திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பத்து கிராமங்களில் அமுல் செய்யப்படும் சிறுவர் கழகங்களின் கலாசார விழா எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

அறவழி செயலகத்தின் குழுத் தலைவர் வி. ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பிற் நிறுவன மாவட்ட இணைப்பாளர் ரீ.ரீ. மயூரனும், சிறப்பு விருந்தினர்களாக நாவற்குளி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ. மேகலிங்கம், சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன். இ. ஜெயபாலன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

விழாவில் சிறுவர் கழகங்களுக்கு மரக்கன்று வழங்கல், சிறுவர் நூலகங்களுக்கு நூல்கள் வழங்கல் ஆகியவை இடம்பெறும்.

விழாவில் நுணாவில் மேற்கு, நாவற்குழி கிழக்கு, கொடிகாமம் தெற்கு, மந்துவில் வடக்கு, கைதடி நுணாவில், மட்டுவில் கிழக்கு, கைதடி தென்கிழக்கு, தாவளை இயற்றாளை, விடத்தற்பளை, கெற்பேலி ஆகிய அறவழி சிறுவர் கழகங்கள் பங்குபற்றுகின்றன. (202-207)

* * *

நவாலி, ஒக.1

ஆனைக்கோட்டை அ.மி.த.க பாடசாலையிலிருந்து ஓய்வுபெற்ற திருமதி சறோஜினி நாகமணியின் சேவை நலன் பாராட்டு விழா இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் சி. நாகையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. சுந்தரசிவம் கலந்துகொள்வார்.

* * *

யாழ்ப்பாணம், ஒக.1

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறையும், கலைவட்டமும் இணைந்து நடத்தும் உலகப் புகழ்பெற்ற திரைப்படங்களின் காட்சி வரிசையில் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பொருளியல்துறை மண்டபத்தில் ஜப்பானிய திரைப்பட நெறியாளர் அக்கிராகுரோசோவின் ஒஸ்கார் விருந்துபெற்ற 'ரஷ்மோன்' திரைப்படம் காட்சிப்படுத்தப் படவுள்ளது. (202)

* * *

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ். போதனா வைத்தியசாலை, சிவபூமி அறக்கட்டளை மற்றும் காரைநகர் சுற்றயல் கூறு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவை இணைந்து நடத்தும் பல்துறைசார் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காரைநகர் சுற்றயல் கூறு வைத்தியசாலையில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரை நடைபெறவுள்ளது. (202)

# சனி மாற்றம் தரப்போகும் பலன்கள் என்ன?

சனிபகவான் முத்தியைக் கொடுக்கும் கிரகம். அவர் உலக இச்சைகளை, ஆசைகளை இன்பங்களை அடையவிடமாட்டார். சனி பகவானுக்கு பன்னிரண்டு இராசிகளில் கடகம், சிங்கம், விருட்சிகம் என்ற மூன்று இராசிகளின் வீடுகளும் பகை வீடுகளாகும்.

அவர் பகையான வீட்டிற்குச் சென்று அமைதியையும், சாந்தியையும், உலக இன்பங்களையும் தரமாட்டார். அவ்வாறான பகைவீடுகளில் சஞ்சரிக்கும் காலத்தில் குரு பார்வையால் மட்டுமே சாந்தி அடையக் கூடியவர்.

கடந்த 24.06.2005 தொடக்கம் எதிர்வரும் 04.08.2007 (சனிக்கிழமை) வரை கடகராசியில் நின்று உலகிற்கு பல அனர்த்தங்களைத் தந்து கொண்டிருக்கும் சனி பகவான், சலராசியான கடகராசியில் பகையாக இருந்து சுனாமி போன்ற கடல் அனர்த்தங்களையும், இயற்கை அழிவையும், யுத்தத்தையும் அதனால் மனித அழிவையும் தந்து, 05.08.2007இல் தனது பகைவீடான சிங்கராசிக்கு இடப்பெயர்ச்சி மேற்கொள்வதை சோதிட சாஸ்திரங்களில் நம்பிக்கைக்கொண்ட அனைவரும் சமாதானமும், சாந்தியும் அமைதியும் நாட்டில் ஏற்படுமோ என்று தமக்குள்ளே கேள்வி எழுப்புவது இயல்பு.

05.08.2007இல் சிங்கராசியில் பிரவேசிக்கும் சனிபகவான் அங்கு ஏற்கனவே பகையாக இருக்கும் தன்னுடன் ஒத்துவராத கேது என்று சொல்லப்படும் சாயாக்கிரகத்துடன் மோதல் நிலைக்குத் தள்ளப்படுகிறார். அது மட்டுமன்றி தமிழ் ஆவணி மாதத்தில் சூரியனும் சிங்கராசியில் இருக்கும் சனியானது கேதுவுடன் சேர்க்கைப்பட தனது நட்பு வீடான இடபராசியிலிருந்து செவ்வாயும் தனது 4ஆவது பார்வையால் சனி, சூரியன், கேதுவை நோக்குவது நான்கு யுத்தக் கிரகங்கள் மோதும் நிலை நான்குவகை எரிபொருள்கள் ஒன்றாகச் சேர்ந்து கொழுந்து விட்டு எரிவது போன்ற பலனாகும். எனவே வழமையான ஆடிமாத அவலங்கள் ஆவணி மாதத்திற்கு தள்ளப்படுகின்றன.

எனவே, பன்னிரண்டு இராசிகளில் தனது ஆட்சி வீடான மகர, கும்ப ராசிக்குரிய சனிபகவான் கும்பலக்கினத்தைக் குறிக்கும் இலங்கையின் கும்பலக்கினத்திற்கு 7ஆம் வீடான சிங்கராசியில் சனிபகவானுடைய அகோர நிலை இரு பிரிவுகளாக பலன்தர இடமுண்டு.

அவை வருமாறு:

(அ) 28.07.2007 தொடக்கம் 17.08.2007 வரை, சனி செவ்வாய் ஒன்றையொன்று நோக்கும் காலம் கடகராசியிலிருந்து சனிபகவான் தனது 10ஆவது பார்வையால் மேடராசியிலிருக்கும் செவ்வாயை நோக்குவதும், மேடராசியிலிருக்கும் செவ்வாய் கடகராசியிலிருக்கும் சனியை தனது 4ஆவது பார்வையால் பார்ப்பதும் ஆடி மாதம் முடியும்வரை பெரிதாக அனர்த்தங்களோ அல்லது சமாதானமோ நிலவக்கூடிய நிலையை கிரகம் தரமாட்டாது. சனிபகவான் ஆடி மாதத்தில் அஸ்தமனமாவார். அது அடுத்த வீடான சிங்கராசிக்கு தனது முழு உடம்பையும் உள்வாங்கிய நிலையாகும். எனவே நல்ல பலனுக்கு இடமில்லை.

(ஆ) 18.08.2007 தொடக்கம் 16.09.2007 வரை : ஆவணி மாதம் பிறந்தவுடன் ஏற்கனவே 05.08.2007 இல் சிங்கராசிக்கு சென்று கேதுவும் மோதிக்கொண்டிருக்கும் சனி, கேதுவுடன் சூரியபகவானும் சேர, அதை இடபராசியிலிருந்து செவ்வாயும் பார்ப்பதால், நான்கு கிரகங்களின் உக்கிரமோதல் நிலை உருவாகும். அது இலங்கையின் கும்பலக்கினத்திற்கு 7ஆம் வீடாக அமைவதால் பேரழிவைத் தரும் யுத்த சூழ்நிலை, சமாதானச் சீரழிவு, கல்வி கற்கும் மாணவர்களுக்கு கல்வி நிலை முடக்கம் மற்றும் இயற்கை அழிவு, பூகம்பம், சுனாமி போன்றவை ஏற்பட இக்காலப் பகுதியில் அதிகமாகக் காணப்படும்.

மேலும் 05.08.2007 இலிருந்து அடுத்து 2 1/2 வருடங்களுக்கு கும்பலக்கினத்தை சனியும், கேதுவும் நோக்குவது அமைதி தரும் காலமல்ல.

மேலும் இந்தச் சனி மாற்றக் காலம் மகரம், கும்பம், கடகம், சிங்கம், கன்னி ஆகிய இராசிக்காரர்களுக்கு அவதானம் பேண வேண்டிய காலமாகும்.

மேற்சொல்லப்பட்ட பலன் அண்மை நாடுகளுக்கும் பொருத்தமானதாகக் கருதப்படக்கூடியது. இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் சனி மாற்றத்தால் அரசியல் மாற்றத்துக்கும் யுத்த நிலைக்கும் தள்ளப்படும்.

பாரிய இயற்கை அழிவையும் பொருளாதார நெருக்கடியையும் சந்திக்கவேண்டும்.

(இ) அரசியல் நிலை: அரசியலில் மாற்றம் ஏற்பட்டு அரசு மாறிவிடக்கூடிய நிலை. 16.09.2007 வரை பதற்ற நிலை தந்தாலும், அப்பால் அரசியல் மாற்றம் ஏற்பட வாய்ப்பு இல்லை.

*சங்கானை - சண்முகரத்தினம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SRI LANKA BOOK DEPOT
## பாடப் புத்தகங்கள் விற்பனையாகின்றன

* தரம் 1 முதல் உயர்தரவகுப்பு வரையான மாணவர்களுக்குரிய அனைத்து வகையான (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) புதிய பாட நூல்கள், செயல் நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் அனைத்து வகையான - இந்திய வெளியீடுகள் யாவும் விற்பனையாகின்றன.

இன்று முற்பகல் 9மணிமுதல் பிற்பகல் 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

* ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ள முந்துங்கள்.

குறிப்பு : அப்பியாசக் கொப்பிகளான இரட்டைறூல் / பெரிய சதுர றூல் / நான்குறூல் என்பனவும் வந்துள்ளன.

தொடர்புகளுக்கு:
**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
**234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.: 021 222 2573**

(சி/53061)

## விற்பனையாகின்றது CD கள் மூலம் SPOKEN ENGLISH

ஆங்கிலம் சரளமாகப் பேசவிரும்பும் அனைத்து தரப்பினருக்கும் மிகவும் உகந்தது. வீட்டில் இருந்தவாறே விரும்பிய வேளையில் விரும்பிய தடவைகள் கற்றுக் கொள்ளலாம். மிகவும் பயனுள்ளது, விலை குறைவானது. இது உங்கள் வீட்டு ஆங்கில ஆசிரியன். (4 ACD + 20 VCD) இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கிறது பிரதிகளுக்கு முந்துங்கள்.

பிரதியாக்கம் செய்ய முடியாதது

*கிடைக்கும் இடங்கள்:*

| | |
|---|---|
| **பூபாலசிங்கம் புத்தகசாலை** பஸ் நிலையம், யாழ்ப்பாணம். | கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையம் 360, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 222 9041 |
| **துர்க்கா புத்தகசாலை** பஸ் நிலையம், சுன்னாகம். | **மெடிலான்ட் பார்மசி** ஆலடி சந்தி, மானிப்பாய். மாலை 3.30 - 4.30 |
| **இராஜலக்ஷ்மி மல்டி பலஸ்** பஸ் நிலையம் எதிரில் நெல்லியடி, கரவெட்டி. | **ரெனி மூக்குக் கண்ணாடியகம்** 88, பிரதான வீதி, பருத்தித்துறை. (63031) |


## லயன்ஸ் கழகம் நடத்தும் இலவசக் கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம் ஓக. 1

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவசக் கணனிப் பயிற்சி எதிர்வரும் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அரசடிவீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள சொப்ட்வியூ கொம்பியூட்டர் கொலிஜ்ஜில் நடைபெறவுள்ள இப்பயிற்சியில் இணைய விரும்புபவர்கள், தலைவர் ப.செந்தில் செல்வன், யாழ் லயன்ஸ் கழகம், பழைய வளவு, நெல்லியடி வடக்கு, வதிரி, கரவெட்டி என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)


## சேவையை நயந்து வாழ்த்துகின்றோம்



இன்று (01.08.2007) சேவை நலன் பாராட்டைப் பெறும்
திருமதி **தயாநிதிதேவி சத்தியசீலன்**
எமது பாடசாலையில் 1990ஆம் ஆண்டில் ஆசிரியராகவும், 2005ஆம் ஆண்டில் இடைநிலைப்பிரிவிற்கான பகுதித்தலைவராகவும் இருந்து சிறந்த சேவையாற்றி 04.06.2007 இல் ஓய்வுபெற்றுச் சென்ற ஆசிரியர் அவர்களை நன்றியுடன் பாராட்டி வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுகாலத்தில் எல்லாச் செல்வங்களையும் பெற்று மனநிறைவுடனும், மகிழ்ச்சிகரமாகவும் வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மயிலனி சைவ மகா வித்தியாலயம், சுன்னாகம். **பாடசாலைச் சமூகம்.**

(63040)

## புறொயிலர் விற்பனை

புறொயிலர் சிக்கன் தேவையான அளவுகளில் ஆகப்பிந்திய விலைகளில் 12 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். **குமரன் பாம், 227, பிறவுண் வீதி, (நரியன் குண்டடி) யாழ்ப்பாணம்.** (63082)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
**19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.**

(63050)

## விற்பனைக்கு

WHEEL CHAIR (நோயாளர் சில்லு வண்டி) விற்பனைக்குண்டு. **சம்பந்தர் மோடோன் கிளினிக்** இல.8, இராமையாச் செட்டியார் லேன், யாழ்ப்பாணம். (62684)

## COMPUTER விற்பனைக்கு

தரமான நிலையில் ஒரு கைப் பாவனையில் உள்ள PIV (intel 3.0 GHZ Processor, 256 MB DDR2 RAM, With AGP Card, 80 GB Harddisk, Dun Rom lombo, 15" Philips Monitor (Black) New UPS விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள: 0773105618 0777917814

**அப்பன் கடை** முதலாம் கட்டை, பருத்தித்துறை.

(63077)

## விண்ணப்பம் கோரல்

வலுவிழந்தோர்களிற்கான புனர்வாழ்வு சேவையாளர் பயிற்சிக்கான **விண்ணப்பம் கோரல்**

மேற்படி 6 மாத காலப்பகுதியைக் கொண்ட பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்பும் கீழ்வரும் தகைமைகளையுடைய ஆண், பெண் இருபாலரும் 15.08.2007 ஆம் திகதிக்கு முனனர் கீழ் குறிப்பிடப்பட்ட எமது முகவரிக்கு தங்களது விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம்.

1. வலுவிழந்தோரிற்கான சேவையில் ஆர்வம் உடையவராக இருத்தல் வேண்டும்.
2. க.பொ.த சாதாரண தரத்தில் விஞ்ஞான பாடம் உட்பட 3 பாடத்தில் திறமைச் சித்தியும், மொத்தமாக 06 பாடங்களில் சித்தியடைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
3. க.பொ.த.உயர்தரத்தில் ஆகக்குறைந்தது இரு பாடங்களேனும் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (விஞ்ஞானத்துறைக்கு முன்னுரிமை வழங்கப்படும்)
4. 18-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்
5. பயிற்சிக்காலக் கொடுப்பனவாக ரூபா 2000.00 மாதம் கொடுக்கப்படும்.

**தலைவர்,**
*வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்,*
*100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில், யாழ்ப்பாணம்.* (சி.53053)

## 31 ஆம் நாள் நினைவு நிகழ்வும் நன்றி நவிலலும்

மண் மகிழ 08 - 03 - 1927



விண் சிறக்க 02 - 07 - 2007

### அமரர் ஐயாத்துரை நடராசா

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து அஞ்சலி செலுத்தி எமது துயரத்தைப் பகிர்ந்து கொண்டு கண்ணீர் அஞ்சலிகள் அச்சிட்டும் தொலைபேசி, தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (01.08.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*குடும்பத்தினர்:* (63009)

*சுதுமலை வடக்கு, மானிப்பாய்.* அ.விஜயகோபி *(போன்)*, **ஸ்ரீ ஜனா எலக்றிக்கல்ஸ்.** 1157, கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார்கோணடிலடி, யாழ்ப்பாணம்.

## தவறிவிட்டது

செல்லத்தம்பி ரூபேந்திரன் என்பவருடைய தொழில் அடையாள அட்டை கனகரத்தினம் மகாவித்தியாலய வீதிக்கும் கோயில் வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் அதில் குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு அல்லது எமது இல.55, ஆயுட்காப்புறுதிக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை. கன்னாதிட்டிச் சந்தி, யாழ்ப்பாணம் அலுவலகத்தில் கொடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (63069)

## காணி விற்பனைக்கு

வாழைத்தோட்டத்துடன் வீடுகட்டுவதற்கும், வர்த்தக ஸ்தாபனம் அமைப்பதற்கும் கோப்பாய், இராச வீதி, கல்வியியல் கல்லூரிக்கு முன்பாக 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

*தொடர்பு:* **இ.அருளானந்தம்**
384, கோயில் வீதி, நல்லூர்.
T.P. 222 5081 (63046)

## பந்தல் விற்பனைக்கு

சொக்கட்டான் பந்தல் அதனுடன் கூடிய கதிரைகள், சமையல் பாத்திரங்கள், சில்வர் பொருள்கள் அனைத்தும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: *சீ.மகாலிங்கம் (ராசன்),*
தில்லையம்பதி, *கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.*
T.P. 077 9788732 (63039)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 01 - 07 - 1965



மறைவு 01 - 08 - 2003

### திருமதி ஜெயராணி வரதராஜா (காங்கேசன்துறை)

(ஆசிரியர், யா/கீரிமலை நகுலேஸ்வரா மகாவித்தியாலயம்)

அன்பின் சிகரம் ஜெயாவே
ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்
ஆறாமறுக்கின்றன எம் நெஞ்சம்
உங்கள் நினைவுகளில் நாங்கள் வாழ்வதால்
உங்கள் வாழ்வு தொடரும்
எம் நினைவோடு...!

துர்க்காமில் அருகாமை, பொன்னாலை வீதி, மானிப்பாய். (63045) **கணவர், குடும்பத்தினர்.**

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 08 - 12 - 1945



மறைவு 03 - 08 - 2006

### லடிஸ்லான் மேரி பேடினட்

(ஓய்வு பெற்ற ஆசிரியர், சம்பத்தரிசியார் கல்லூரி)

*ஆண்டொன்று ஓய்ந்தது*
*எம் ஓலங்கள் ஓயவில்லை*
*உம் உலகக் கயிறு ஓ அறுந்தது*
*எம் பாசக் கயிறு அறவேயில்லை*
*உம் ஒளி முகம் எம் கண் முன்னே*
*குறும்புப் பேச்சு எம் கண் முன்னே*
*எம்மோடு நீர் வாழ்ந்த காலம்*
*நீங்கா நினைவலையாத் தொடருமே*
*ஆண்டவன் சந்நிதியில் ஆற அமர்ந்திருந்து*
*நித்தம் எமக்காய் நித்தியனை வேண்டுவீரே*

இவரின் ஆன்ம சாந்திக்காக 03.08.2007 வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

முதலாம் குறுக்குத்தெரு, பாஷையூர். பாசமிகு **மனைவி, பிள்ளைகள், அம்மா, சகோதரர்.** (63051)

# COMPUTER EXPRESS
## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

### மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 — 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~7,000~~ 1,400 | Honours Diploma in Computer Science 5 Months ~~9,000~~ 1,800 | Diploma in Web page Designing 4 Months ~~7,000~~ 1,400 |
| Diploma in Graphic Desining 4 Months ~~7,000~~ 1,400 | Diploma in Desktop Publishing 4 Months ~~6,000~~ 1,200 | Diploma in Hardware Engineering 3 Months ~~6,000~~ 1,200 |
| Diploma in Auto CAD 3 Months ~~6,000~~ 1,200 | Diploma in Microsoft Office 3 Months 750 | Accounting Package 3 Months ~~7,000~~ 1,400 |

**50% Off ADVANCE COURSES**

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5000~~ | 2,500 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |

வகுப்புக்கள் ஆரம்பம் :
- Batch I : 04/08/2007
- Batch II : 08/08/2007
- Batch III : 11/08/2007
- Batch IV : 15/08/2007

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வேலைவாய்ப்புக்கான கணனிப்பயிற்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**தரம் 5 மாணவர்களுக்கான மாதிரிப் பரீட்சை**
**வினாத்தாள் ஐ**
ஆக்கம்: திரு.வே.அன்பழகன், யாழ்ப்பாணம்.
45 நிமிடங்கள்


* முதலாம், 2ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள உருவங்கள் ஒரே மாதிரி யாகத் தெரிந்தாலும் எல்லா வரிசைகளிலும் ஓர் உருவத்தில் குறைபாடு உண்டு. அதைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.


01. A B C D E


02. A B C D E


* 3-6 வரையுள்ள வினாக்களில் தரப்பட்ட உருக்கோலங்களை அவதானித்து அடுத்து வரும் உருவை A,B,C,D,E,F ஆகியவற்றிலிருந்து தெரிந்து அதன்கீழ்க் கீறிடுக.

03.


04.


05.


06.


* 7ஆம், 8ஆம் வினாக்களில் வாக்கியத்திற்குப் பொருத்தமான கூற்றைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக.

07. அமலன் வீட்டுக்குத் தேவையான பொருள்களை வார இறுதியில் சந்தைக்குச் சென்று வாங்குவான். அதற்குக் காரணமாக அமைவது எது?
1. ஒரே இடத்தில் எல்லாப் பொருள்களையும் வாங்க முடியும்
2. தனக்கு விடுமுறை கிடைப்பதால்
3. வீட்டுக்கு அருகில் இருப்பதால்

08. எமது பகுதியில் எவருக்கும் டெங்கு நோய் ஏற்படவில்லை. அதற்குக் காரணம் யாது?
1. அருகில் வைத்தியசாலை அமைந்திருப்பதால்
2. அவர்கள் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருப்பதால்
3. அவர்கள் எல்லோரும் கற்றவர்கள் என்பதால்

* 9ஆம், 10ஆம் வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கீறிடுக.

09. கீழே பசுவில் பாலெடுத்து கடையில் விற்கும் வரையிலான செயற்பாடுகள் காட்டப்பட்டுள்ளது. அதன் சரியான ஒழுங்கு

1. B,D,E,A,C 2. A,B,C,D,E 3. E,D,B,A,C


10. கீழேயுள்ள பெட்டிகளுக்குள் இருக்கும் வசனங்களை வாசியுங்கள். அவைகளைப் பொருத்தமாக ஒழுங்குபடுத்தினால் வரும் விடை.
1. மறுநாள் காலை வயலுக்குச் சென்று "பயிர்கள் உண்டாகி இருக்கிறதா" என்று பார்த்தான்.
2. விதை நெல் முளைத்திருக்கிறதா என்று பார்த்தான்.
3. கமக்காரன் வயலில் நெல் விளைவிப்பதற்காக வயலை ஒழுங்குபடுத்தினான்.
4. சில நாள்களின் பின் நெற்பயிர்களைக் கண்டு கமக்காரன் சந்தோஷம் அடைந்தான்.
5. வயல் முழுவதும் முளைத்த நெல்லை நட்டான்.
1. 1,5,3,2,4 2. 3,2,5,1,4 3. 2,3,5,1,4

* 11ஆம், 12ஆம் வினாக்களுக்குக் கீழ்வரும் வினாக்களில்(?) இடைவெளிக்கு வரவேண்டிய விடையின்கீழ்க் கோடிடுக.

11 i) 2 — 3 — 6 — = 30
ii) 4 — 2 — 5 — = 30
iii) 3 — 3 — 6 — = ? 1. 30 2. 36 3. 40

12.
△ + △ + □ = 10
□ + □ + △ = 11
△ + △ + △ = [?] 1. 9 2. 12 3. 15


* 13ஆம், 14ஆம், 15ஆம் வினாக்களுக்குச் சரியான விடையின்கீழ்க் கீறிடுக.

13.  இவ்வுருவில் மரக்குற்றிகள் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. உருவைச் சுற்றி நிறம் தீட்டப்பட்டுள்ளது எனின், மூன்று முகங்கள் நிறம் தீட்டப்பட்ட சதுரமுகிக் குற்றிகள் எத்தனை?
1.8 2.4 3. 6

14. குணசீலனின் தற்போதைய வயது அவருடைய தந்தையின் வயதின் அரைப்பங்காகும். குணசீலனுக்கு இப்போது வயது 18 வருடங்கள் ஆகும் எனின் தந்தையின் தற்போதைய வயது என்ன?
1. 40 வருடங்கள் 2. 36 வருடங்கள் 3. 20 வருடங்கள்

15. 79இற்குக் கிட்டிய எண் யாது? 1. 75 2. 70 3.82

* 16ஆம், 17ஆம், 18ஆம் வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள குறியீடுகளையும் வாக்கியங்களையும் அவதானித்து சரியான விடையின்கீழ்க் கீறிடுக.


மாணவர்கள் பாடசாலைக்குச் சென்றனர்
மைதானத்தில் மாணவர்கள் விளையாடுகின்றார்கள்
பாடசாலையில் நூலகம் உண்டு
மாணவர்கள் சுற்றுலா சென்றனர்


16. மாணவர்கள் என்ற சொல்லுக்குப் பொருத்தமான உரு யாது?
1) ○ 2) △ 3) □

17. பாடசாலை என்ற சொல்லுக்குப் பொருத்தமான உரு யாது?
1) △ 2) ○ 3) □

18. சுற்றுலா என்ற சொல்லுக்குப் பொருத்தமான உரு யாது?
1) ☼ 2) ☺ 3) M

* 19ஆம், 20ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் முதலில் தரப்பட்டுள்ள உருவத்தோடு சம்பந்தப்பட்ட உருவத்தைத் தெரிவுசெய்யவும்.

19.

1. 2. 3. 4.

20.

1. 2. 3. 4.


* 21ஆம், 22ஆம் வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடவும்.

21. பாடசாலை மாணவ தலைவன்
1. எப்பொழுதும் மற்ற மாணவர்களுக்கு உதாரணமாகத் திகழ வேண்டும்
2. மற்ற மாணவர்கள் செய்யும் குற்றத்திற்குக் கடுமையான தண்டனை வழங்கவேண்டும்
3. தனக்கு வழங்கப்பட்ட கடமைகளில் மட்டும் கவனம் செலுத்தவேண்டும்.

22. வீதியோரத்தில் இருக்கும் நீர்க்குழாய் திறந்திருப்பதைக் கண்டால் நீங்கள் செய்யவேண்டியது.
1. அதைப் பார்த்துச் சந்தோஷப்பட வேண்டும்.
2. குழாயை மூடப்போனால் உடுப்புகள், கைகால் நனைந்துவிடும் என்று அமைதியாக இருக்கவேண்டும்.
3. தன்னால் குழாயை மூட முடியாவிட்டால் பெரியோரை அழைத்து அதை மூடுவிக்கவேண்டும்.

* 23ஆம், 24ஆம் வினாக்களுக்குரிய விடையைத் தரப்பட்டுள்ள நான்கு விடைகளில் இருந்து தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.

23. 6 5 8 4 எனும் எண் எழுதப்பட்டுள்ள குறியீட்டைத் தெரிவுசெய்க.


24. அன்பகம் எனும் சொல் எழுதப்பட்டுள்ள குறியீட்டைத் தெரிவு செய்க.


* 25ஆம், 26ஆம் வினாக்களுக்குக் கீழே பல செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பயன்படுத்தி சரியான விடையின்கீழ்க் கீறிடுக.

A - மக்கள் குடைகளை ஏந்திச் செல்லுதல்
B - நனைந்த பறவைகள்
C - வெடித்துப் பிளந்து காணப்படும் தரை
D - வெப்பம் மிகுந்த சூரிய ஒளி
E - பட்டங்கள் பறத்தல்
F - சேற்று மயமான வீதிகள்

25. மேலுள்ள செயற்பாடுகள் அவதானங்களில் மழைநாளில் நீர் காணக்கூடியவற்றை உள்ளடக்கிய விடை
1.ACD 2.ABF 3. BDF

26. மேலே உள்ளவற்றில் வெயில்நாளில் அவதானிக்கக் கூடிய செயற்பாடுகள்
1.CDE 2.ABF 3. BCF

* 27ஆம், 28ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு அமைய விடை எழுதுக.

27. கீழ்வரும் படங்களில் இரண்டு படங்கள் மட்டும் ஒரே வடிவமானவை. அந்த இரண்டு படங்களினதும் ஆங்கில எழுத்துக்களைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

(.......... ..........)

28. ஒத்த உருவங்கள் இரண்டு உள்ளன. அவற்றின் இலக்கங்களை கோட்டி எழுதுக.

(.......... ..........)

* 29ஆம், 30ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழ்வரும் கவிதைப் பகுதியை வாசித்து, விடையைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது


29. இப்பாடல் பகுதியைப் பாடும்போதும் எம் நினைவிற்கு வரும் இரு முதுமொழிகள் யாவை?
1. உப்பிட்டவரை உள்ளவும் நினை, உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு
2. தந்தை சொல் மிக்க மந்திரமில்லை, தாயிற் சிறந்தொரு கோயிலுமில்லை
3. ஆறு கடக்கும் வரை அண்ணன் தம்பி, கல்விக்கழகு கசடற மொழிதல்.

30. தற்காலத்தில் உள்ள வயோதிபம் அடைந்தோரைப் பராமரிக்கும் நிலையம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
1. செஞ்சிலுவைச் சங்கம் 2. அநாதைகள் இல்லம்
3. வலது குறைந்தோர் பராமரிப்பு நிலையம் 4. முதியோர் இல்லம்


* 31ஆம், 32ஆம் வினாக்களுக்கு மிகவும் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

31. பலா : பழம், கத்தரி : (பூ, காய், இலை)
32. மேசை : மரம், பானை : (சட்டி, கால், களிமண்)

* 33ஆம், 34ஆம் வினாக்களில் காட்டப்பட்டுள்ள எண் கோலங்களை அவதானித்துவெற்றிடத்திற்குப்(?)பொருத்தமான பெறுமானத்தைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கோடிடுக.

33.


1. 16 2. 18 3. 20

34.



1. 36 2. 37 3. 42


* 35ஆம், 36ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகளின் கருத்தை நன்கு விவரிக்கும் விடையைத் தெரிவு செய்க.


35. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
1. சிறிய மரம் ஒன்றைப் பெரிதானதும் வளைக்க முடியுமா?
2. ஐந்து வயதில் படித்தாலும் ஐம்பது வயதில் படிக்க முடியாது.
3. சிறுவதில் திருத்த முடியாதவற்றை வளர்ந்த பின்னர் திருத்த முடியாது.


36. புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது
1. சிலர் வறுமையடைந்தாலும் பொருத்தமற்ற காரியங்களைச் செய்யமாட்டார்கள்.
2. சிலர் வறுமையடைந்தாலும் சுவையான உணவினையே நாடுவர்.
3. சிலர் வறுமையடைந்தாலும் பிறருக்கு அடிபணியமாட்டார்கள்.

* 37ஆம், 38ஆம் வினாக்களில் ஒரு கடதாசித் துண்டை நான்காக மடித்து அதில் சில துவாரங்கள் துளைக்கப்பட்டுள்ள விதத்தை முதலில் தரப்பட்டுள்ள உரு காட்டுகிறது. இக்கடதாசித் துண்டை மீண்டும் விரிக்கும்போது தோற்றும் உருவைத் தெரிவுசெய்து அதன்கீழ்க் கீறிடுக.

37.

(1) (2) (3)

38.

(1) (2) (3)

39. சிறுவனொருவன் கீழே காட்டப்பட்டுள்ளவாறு சமபக்க முக்கோணி வடிவத்தில் ஒரு பூப்பாத்தியை அமைத்து, அதன் எப்பக்கத்தால் பார்த்தாலும் பத்துத் தூண்கள் வரும் வகையில் தூண்களை நாட்டி வேலி கட்டினான். இவ்வேலிக்காக சிறுவன் எத்தனை தூண்களைப் பயன்படுத்தினான்.

1. 30 2. 27 3. 33

40. பிழையாக இலக்கமிடப்பட்டுள்ள புத்தகம் எது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியின் மூத்த பழைய மாணவனும் முன்னாள் அதிபருமான வைத்திய கலாநிதி

**A.V. இராஜரட்ணம்**

அவர்கள் 29.07.2007 ஆம் திகதி காலமானதை யிட்டு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து அன்னா ரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரிச் சமூகம்.

(63074)

## விற்பனைக்கு

ஏ-9 கண்டி வீதி, அரியாலையின் நடுத்தா வீதியில் ப.தே.ல. அபி.சங் கத்திற்கு அருகில் 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பெறுமதி 13,00,000/- நேரிலும் பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 077 6670175, 077 3675104, 077 3164563.

(63087)

## Personal Class

Gr. 6 to 10 - English Medium Science and A/L - Chemistry. வகுப்புகள் நடைபெறுகின்றன.

(63088) தொடர்பு: மே/பா உதயன், விள.இல. 2994

## பரம்சோதி வைத்திய நிலையம் & விசேட சித்தா கிளினிக்

*142, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.*

### நவீன ஆயுர்வேத சிகிச்சை மையம்

- தீராத, நாட்பட்ட, கைவிட்ட நோய்களுக்கான விசேட சிகிச்சைகள்
- மூட்டுவாத நோய்களுக்கான நவீன கிசிச்சை முறைகள்
- பீனிசம், ஒற்றைத்தலைவலி, இளநரை, பொடுகு, பூச்சிவெட்டு, முடிஉதிர்தல் போன்றவற்றிற்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்ட எண்ணெய்வகைகள்.
- வேறு வைத்திய முறைகளால் தீர்க்க முடியாத கைவிட்டநோயா ளர்களுக்கும் கைகொடுத்து அபயமளிக்கும் ஒரே நிறுவனம்.

(63096) (ஞாயிறு விடுமுறை)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Center

(நாதன் திரையரங்குக்கு முன்னால், மேல்மாடி)

Spoken English with Grammar மற்றும் சிங்களம், Short hand Typing ஆகிய பாடங்கள் இருமொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்
04-08-2007

(63073)

## அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக 01

இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் இவ்வாண்டு ஜீ.சி.ஈ உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களிற்கான அனுமதி அட்டை வழங்கும் நிகழ்வும் மாதா, பிதா, குரு, தெய்வவழிபாடும் பாடசாலை பிரார்த்தனை மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களுக்கு அருளாசி வழங்கி அருளுரையை தெல்லிப்பழை யூனியன் கல்லூரி ஆசிரியர் சைவப்புலவர் ஏ.அனுசாந்தன் நிகழ்த்துவார். (202-45)

## குளோரின் பெறலாம்

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் குளோரின் பெறவிரும்புபவர்கள் தங்கள் பகுதிக்கான சுகாதார பரிசோதகர்களிடம் இலவசமாக பெற்றுக்கொள்ள முடியும் என நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

சுகாதாரப் பரிசோதகர்கள் மூலம் பொதுக் கிணறுகளுக்கு மட்டுமே குளோரின் விசிறப்பட்டு வருகின்றது என்றும்-

தங்கள் வீடுகளில் உள்ள கிணறுகளுக்கு குளோரின் விசிற விரும்புபவர்கள் சுகாதார பரிசோதகர்களிடம் சென்று அவரின் ஆலோசனைக் கேற்ப குளோரினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (202-69)

## தேசமே பயப்படாதே! மகிழ்ந்து களிகூர்!

(2003 ஏப்ரல் மாதம் யாழ். துரையப்பா மைதானத்தில் கூறப்பட்ட 18 தீர்க்க தரிசனங்களையும் யாருமே எளிதில் மறந்துவிட முடியாது)

### 'எழுப்புதல் பெருவிழா'

உங்கள் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து இருக்கிறீர்களா? பலவிதமான பிரச்சினைகள் மூலமாக உங்கள் மனம் சோர்ந்து போயுள்ளதா? மனிதனால் கைவிடப்பட்டு இருக்கிறீர்களா? பலவித வியாதிகளால் வேதனைப்படுகிறீர்களா? உங்கள் இதயம் கலங்காது இருப்பதற்காக நீங்கள் ஆண்டவரின் இதயத்திற்குள் இருக்கிறீர்கள். அவரிடம் ஓடி வாருங்கள் அவர் உங்களை ஆசீர்வதிப்பார்.

உங்கள் வாழ்வு மாற

தேவ செய்தியும், ஜெபமும்

Rev. S.டானியல்

இடம்:- யாழ்.தமிழ் மிஷன் சபை, 418, நாவலர் வீதி, மாம்பழம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம்.

காலம்:- 03-08-2007, 04-08-2007, 05-08-2007 திகதிகளில்

நேரம்:- பி.ப. 2 மணிக்கு, ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு ஆராதனை


ஆண்டவர் இயேசுகிறிஸ்து மூலம் விடுதலை பெற அனைவரும் வருக!

ஆசீர் வாதம் பெறுக!

(63076)

பி.கு.: வீடு செல்லும் பொழுது வாகன ஒழுங்கு செய்துதரப்படும்.

## யாழ். ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை ஆசிரியை திருமதி சரோஜினி நாகமணி அவர்களின் சேவைநலன் பாராட்டு விழா



ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலையில் கடந்த 18 ஆண்டுகளாக ஆசிரியையாகச் சேவையாற்றி 27.07.2007 அன்று ஓய்வுபெற்ற திருமதி சரோஜினி நாகமணி அவர்கள் இப்பாடசாலையின் [illegible] சேவையாற்றினார். [illegible] எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,

(62988) பெற்றோர்கள், மாணவர்கள், பழையமாணவர்கள்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### சிவலிங்கம் உதயகாந்தன்



தோற்றம் 28-11-1980 மறைவு 11-08-2006

வயாவிளான், மடத்தடியைப் பிறப்பிடமாகக் கொண்ட சிவலிங்கம் உதயகாந்தன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுநாள் (03-08-2007) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அனைவரும் நினைவு கூரலில் கலந்து கொள்ளுமாறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

உயர்ந்த உருவமுமாய் சின்னத்தம்பி
உயர்விலா நல்உள்ளமும்
கனிந்த சிரிப்பழகும்
கணப் பொழுதில் கரைந்ததேனோ?
பேசமுடியாப் பெண்ணுக்கு நீ
பெருமை தரும் துணையானாய்!
ஊர்போற்றும் வேளையிலே!
உந்தன் உயிர் என்ன ஆனதையா!
ஓராண்டு சென்றதையா!
ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
எம் உள்ளங்களின் ஒளிவிளக்கு
உயிர் விளக்கே நீயன்றோ!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிரந்தர முகவரி: வயாவிளான், மடத்தடி, (குரும்பசிட்டி வீதி)

தற்காலிக முகவரி: செல்வநாயகபுரம், அச்சுவேலி மேற்கு.

பெற்றோர், மனைவி, சகோதர சகோதரிகள், (குமார் குடும்பத்தினர்).

(62803)

## ஆறாம் மாத நினைவலைகள்

சித்த வைத்திய கலாநிதி

அமரர்

### வேலாயுதம்பிள்ளை குகமூர்த்தி



தோற்றம் 21.04.1940

மறைவு 05.02.2007

திதி: 01.08.2007

அப்பா, அப்பா அன்புடன் வளர்த்த
தந்தையே எங்கள் மந்திர வாழ்வே!
உங்கள் அன்பை எங்கினிக் காண்போம்
அணைத்த கையும் ஆறுதல் மொழியும்
எங்களை நினைத்த இனிய நெஞ்சமும்
எந்தப் பிறவியில் காணக் கிடைக்குமோ!

*"கந்தையா வளவு", 259, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

(62786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நீதி தேடும் தமிழினம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பான விடயங்களில், இலங்கைத்தீவின் தற்போதைய முறையின் கீழான நீதித்துறைக் கட்டமைப்பு மூலம் தங்களுக்கு நியாயம் கிட்டும் என்ற நம்பிக்கை சிறுபான்மையினரான தமிழர்களுக்கு முற்றாகவே தகர்ந்து வருகின்றது.

இனப்பிரச்சினையுடன் தொடர்புடைய விடயங்களில் நீதித்துறையின் அண்மைக்காலத் தீர்ப்புகள் அப்படியான மனநிலையையே தமிழரின் மனதில் ஏற்படுத்தி நிற்கின்றன.

✱ ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மற்றும் மீள் கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பு விடயத்தில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு.

✱ இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் முன்மொழியப்பட்டு அதன் அடிப்படையில் ஐக்கியப்பட்டிருந்த தமிழ்த் தாயகத்தை - 17 வருடங்களுக்கு முன்னர் நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தால் முன்னெடுக்கப்பட்டு தொடர்ந்தும் இவ்வளவு காலமும் அதே நிறைவேற்று அதிகாரத்தால் நீடிக்கப்பட்டு வந்த இணைப்பை நிராகரித்து - 17 வருட செயற்பாட்டைத் தவறெனப் பிரகடனப்படுத்தி, வடக்கு, கிழக்கைப் பிளவுபடுத்த நீதிமன்றம் விடுத்த உத்தரவு.

✱ யாழ்.குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட பூர்வீக மக்கள் அதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நியாயமான நிவாரணத்தைப் பாதிக்கப்பட்டோருக்குத் தராமல் நீதிமன்றத்தின் முன் இழுபடுகின்ற போக்கு.

✱ மூதூர் கிழக்கை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துவதை ஆட்சேபித்து அப்பகுதித் தமிழர்கள் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை முடிவுக்குக் கொண்டு வந்து, இனிமேல் அத்தகைய அடிப்படையில் விண்ணப்பங்கள் செய்வதற்கு இடமேயளிக்காமல் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள கட்டளை.

✱ யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நிராகரிக்கக் கோரும் பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளின் மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்த நிலையில், அந்த முடிவுக்கு எதிரான முறையீட்டை விசாரணைக்கு ஏற்று உயர்நீதிமன்றம் வெளியிட்ட கருத்துகள், அவதானிப்புகள்.

- இவை போன்றவை இலங்கையின் தற்போதைய ஆட்சி முறைமைக்கு உட்பட்ட நீதித்துறைக் கட்டமைப்பின் மூலம், தங்களுக்கு நீதி செய்யப்படும் - நியாயம் வழங்கப்படும் - என்ற நம்பிக்கையைத் தமிழர்கள் மனதில் இருந்து அடியோடு தகர்த்து விட்டன.

இலங்கை நீதிமன்றங்களின் தீர்ப்பை விமர்சிப்பது இலங்கையின் நீதிமுறையின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றமாகும். அந்தப் பின்னணியில் - அதன் காரணமாக - அத்தீர்ப்புகள் கடுமையானவையா, பிழையானவையா, நீதியானவையா, சரியானவையா என்பன போன்றவற்றை சட்டத்தின் ஊடாக ஆராய்ந்து கருத்துக் கூறுவதை - அதற்கான வாதத்திற்கு வலுவான காரணங்கள் இருந்தும் - இப்பத்தியில் தவிர்த்துக் கொள்கின்றோம்.

ஆனால் இத்தீர்ப்புகள் பாதிக்கப்பட்டுள்ள சிறுபான்மை இனமான தமிழினத்திற்கு நம்பிக்கை தருவனவாக - தெம்பூட்டுவனவாக - யார் கைவிட்டாலும் நீதித்துறை தமக்கு நியாயம் செய்யும் என்ற உறுதியைத் தருவனவாக - அமையவேயில்லை என்ற நிதர்சனத்தை - தரிசனத்தை - நாம் வெளிப்படுத்துவது நமது கடமையே எனக் கருதுகின்றோம்.

இலங்கைத்தீவின் ஆட்சி முறைமையையும், நீதித்துறைக் கட்டமைப்பையும், நிறைவேற்று அதிகாரச் செயற்பாட்டையும் வழிப்படுத்தி, நெறிப்படுத்தி, வரையறை செய்யும் உயர் அதிகாரம் இலங்கைத்தீவின் அரசமைப்பிடமே உள்ளது.

இலங்கையின் நீதித்துறையாகட்டும், அல்லது நிறைவேற்று அதிகாரமாகட்டும், அல்லது சட்டமாக்கல் அதிகாரம் கொண்ட நாடாளுமன்றமாகட்டும் - எதுவென்றாலும் - அரசமைப்புக் கோட்பாடுகளும் கட்டுப்பாடுகளும் இணங்கவே ஒழுக முடியும்; செயற்பட முடியும். அதுவே யதார்த்தப் புறநிலையாகும்.

1948 இல் இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரம் பிரிட்டிஷ் சாம்ராச்சியத்திடமிருந்து சுதேசிகளிடம் கைமாறுகின்றது என்ற பெயரில், தீவின் பெரும்பான்மையினரான பௌத்த, சிங்களவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அப்போதிருந்த அரசமைப்பு 1970 ஆம் ஆண்டில் ஒரு தடவையும், 1978இல் மற்றொரு தடவையும்; புதிய ஏற்பாடுகள் மூலம் சிங்கள ஆட்சியாளர்களால் முற்றாக மாற்றியமைக்கப்பட்டன.

நாட்டின் ஆட்சி முறைமையையே தலைகீழாக மாற்றும் இந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கலில் தமிழினம் சம்பந்தப்படவேயில்லை. சிறுபான்மையினரான தமிழரை அடிமைப்படுத்தி, தமது மண் மீதான அவர்களின் வாழ்வியல் உரிமைகளையும், சுதந்திரங்களையும், ஆட்சி அதிகாரத் தத்துவங்களையும் கொத்தாகப் பறித்து, பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் கீழ் சிறுபான்மையினரை நிரந்தரமாக அடிமைப்படுத்த வழி செய்யும் இந்த இரண்டு அரசமைப்புகளும் ஒன்றன் பின் ஒன்றாக தமிழரின் பங்களிப்போ, இசைவோ, இணக்கமோ, சம்மதமோ இன்றி அவர்கள் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டன.

சிறுபான்மையினருக்கு நீதி செய்யும் வகையில் சற்று அரக்கவோ, நகர்த்தவோ, விட்டுக்கொடுக்கவோ, நெகிழ்த்தவோ கூட இடமளிக்காத வகையில்இரும்பினாலான சட்டச்சிறையாக அமைந்திருக்கும் இந்த அரசமைப்புகளின் கீழ் - அவற்றிற்கு உட்பட்ட நீதிமன்றங்களிடமிருந்து - இத்தகைய கையாள்கையையும் தீர்ப்புக்களையுமே தமிழினம் எதிர்பார்க்க முடியும்.

இந்த இறுக்கமான சட்டக் கட்டமைப்புக்கு வெளியே வந்து, தமிழர் பக்கத்தில் உள்ள வரலாற்று நியாயங்களையோ, உண்மை நியதிகளையோ இலங்கை நீதிமன்றங்கள் கவனத்தில் எடுத்து நீதி வழங்கும் என்று தமிழர்கள் எதிர்பார்க்கவே முடியாது. அதனையே தொடர்ந்து வெளிவரும் இலங்கை நீதிமன்றத் தீர்ப்புகள் தமிழர்களுக்கு உறுதிப்படுத்தி வருகின்றன.

# ப.நோ.கூ. சங்கங்கள் மீதான முறைப்பாடுகள் விசாரணையை அடுத்து நீதிமன்றங்களுக்கு

## அரச அதிபர் அறிக்கை அனுப்பி வைத்தார்

யாழ்ப்பாணம்,ஒக.1

அத்தியாவசிய பொருள்களை அதிக விலையில் விற்பனை செய்தது தொடர்பாக மக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் குறித்து யாழ். செயலகம் பத்துப் ப.நோ.கூ.சங்கங்களுடன் நடத்திய விசாரணை அறிக்கைகள் சம்பந்தப்பட்ட பிரதேச நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

பொதுமக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகள் தொடர்பாக பத்து ப.நோ.கூ. சங்கங்களின் நிர்வாகத்துடனான விசாரணைகளை யாழ். அரச அதிபர் நேற்றுமுன்தினம் செயலகத்தில் நடத்தினார்.

இந்த விசாரணைகளின் போது பத்துச் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் சமர்ப்பித்த அறிக்கைகள் அந்தந்தப் பிரிவுகளுக்குரிய மாவட்ட நீதிபதிக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் நீதிமன்றத்தின் கட்டளைக்கு அமைவாக மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் ப.நோ.கூ. சங்கங்களின் செயற்பாடுகள் தொடர்பாக அரச அதிபர் விரிவான அறிக்கை ஒன்றை நேற்று விடுத்துள்ளார்.

அந்த அறிக்கை பின்னர் பிரசுரிக்கப்படும்.

(அ-1)

# சீனி, உப்பு ஆகியவற்றுக்கு விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம்,ஒக.1

ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் மக்களுக்கு விற்பனை செய்வதற்கென சீனி, உப்பு ஆகிய பொருள்கள் யாழ். செயலகத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

ஒரு கிலோ சீனியை 63 ரூபாவாகவும் ஒரு கிலோ உப்பை முப்பது ரூபாவாகவும் விற்பனை செய்யுமாறு செயலகம் ப.நோ.கூ. சங்கங்களை அறிவுறுத்தியுள்ளது.

இவை இரண்டும் 'ஜால' கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன. 4லட்சத்து 50 ஆயிரம் கிலோ சீனியும் 40 ஆயிரம் கிலோ உப்பும் ப.நோ.கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

# கிழக்கில் பொலிஸ் படைக்கு தமிழ் இளைஞர்கள் சேர்ப்பு

## கருணா குழுவினரும் இணைவர் என்று எதிர்பார்ப்பு

கொழும்பு,ஒக.1

கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் படையில் பணியாற்றுவதற்கென அப்பகுதி தமிழ் இளைஞர்களை சேர்த்துக் கொள்ளும் நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இந்தப் பொலிஸ் படையில் கருணா குழுவைச் சேர்ந்தவர்களும் இணைந்து கொள்வார்கள் என்று பொதுவாக எதிர்பார்க்கபப்படுகின்றது.

ஆயுதங்களைக் களைவதற்கு கருணா மறுத்துவிட்ட நிலையில் பொலிஸ் படையில் கிழக்கு மாகாண இளைஞர்களை சேர்த்துக்கொள்ளும் திட்டத்தின்படி கருணா குழுவைச் சேர்ந்தவர்களும் இணைந்துகொள்ள முன்வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாக அரச வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவித்தன.

ஏற்கனவே சில இளைஞர்கள் கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் பயிற்சி பெற்று வருகிறார்கள். இவர்கள் அங்குள்ள பொலிஸ் நிலையங்களில் பணிபுரிய அமர்த்தப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குடுமிமலை, வாகரை மற்றும் வெருகல் பகுதிகள் உட்பட புதிதாகக் கைப்பற்றப்பட்ட பகுதிகளில் சுமார் 50 பொலிஸ் நிலையங்களை நிறுவுவதற்கு அரசாங்கம் உத்தேசித்துள்ளது. இதற்கென ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் தேவைப்படுவார்கள் என்று பாதுகாப்பு அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்தார். (அ-ப)

# கிளாலியில் அதிகாரியின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம்,ஒக.1

கிளாலிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கனிஷ்ட படை அதிகாரியின் சடலம் கொடிகாமம் பொலீஸாரால் கடந்த ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டது.

கிளாலி படை முகாமில் கடமையாற்றும் சார்ஜன்ட் ஜெயக்கொடி ஆராய்ச்சிலாகே சுபசேன(வயது 45) என்னும் குருணாகலையைச் சேர்ந்தவரே உயிரிழந்தவர் ஆவார்.

இவரது மரணம் தொடர்பாக சாவகச்சேரி நீதிவான் விசாரணை நடத்தினார்.

சடலத்தினை கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறும் பொலீஸாரை நீதிவான் பணித்தார் (அ-1-207)

# முதலாம் தரத்துக்குப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிராகரித்த நீதிமன்றம், முதலாம் தரத்துக்கான அனுமதி தொடர்பான சுற்றறிக்கை வரைவைத் தானே பிரேரிக்கும் என இந்த வழக்கின் முன்னைய அமர்வுகளில் அறிவித்திருந்தது.

நேற்று முன்தினம் இந்த வழக்கு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் ராஜா பொர்ணாண்டோ, ஜெகத் பாலபட்ட பெந்தி ஆகியோர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது மேற்படி தேசிய கொள்கைச் சுற்றிக்கை வரைவை நீதிமன்றம் வெளியிட்டது.

அதன்படி -

முதலாம் தரத்துக்கான மாணவர் அனுமதிக்குரிய விண்ணப்பங்களை பாடசாலைகள் ஒவ்வொன்றும் எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் ஏற்றுக் கொள்ள வேண்டும். நவம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒவ்வொரு பாடசாலையையும் அடுத்த ஆண்டு தரம் ஒன்று வகுப்புக்கு அனுமதி பெறும் மாணவர்களின் பட்டியலை இறுதி செய்ய வேண்டும்.

இதற்கு வசதியாக -

அனுமதிபெறும் மாணவர்களின் பட்டியலை தாயாரித்து அங்கீகரிப்பதற்கான சுயாதீனக் குழுக்களை பாடசாலைகள் ஒவ்வொன்றும் ஓகஸ்ட் 31ஆம் திகதிக்கு முன்னர் அமைத்து விட வேண்டும்.

### சுயாதீனக் குழுக்கள்

ஒவ்வொரு பாடசாலையும் அமைக்கும் சுயாதீனக் குழுக்களில் பின்வருவோர் இடம் பெற்றிருப்பர்:-

✱ *பழைய மாணவர் சங்கத்தின் பிரதிநிதிகள் - இருவர்,*

✱ *பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பிரதிநிதிகள் - இருவர் (அவர்கள் பாடசாலையின் ஆசிரியப் பிரதிநிதிகளாக இருக்கக்கூடாது)*

✱ *அதிபர் அல்லது அவரது பிரதிநிதியாக பிரதி அதிபரோ அல்லது சிரேஷ்ட ஆசிரியரோ.*

✱ *வலயக் கல்விப் பணிப்பாளரின் பிரதிநிதி ஒருவர்.*

✱ *அரசியலில் சம்பந்தப்படாதவரான பாடசாலையின் நலன்விரும்பி ஒருவர்.*

இந்த ஏழுபேர் கொண்ட சுயாதீனக் குழு அனுமதிக்கான மாணவர் பட்டியலைத் தயாரித்து இறுதி செய்ய வேண்டும்.

### மாணவர் தெரிவுக்கான புள்ளியிடல் முறை

மாணவர் தெரிவுக்கு பின்வரும் முறையில் புள்ளியிடப்படவேண்டும்:-

✱ *மாணவனின் விவேக மதிப்பீட்டுக்கு - ஐம்பது புள்ளிகள் வரை.*

✱ *பெற்றோர் சம்பந்தமான கணிப்புக்கு - நாற்பது புள்ளிகள் வரை.*

✱ *மாணவனின் சகோதர, சகோதரிகளின் கணிப்புக்கு - பத்துப் புள்ளிகள் வரை.*

இந்தப் புள்ளியிடல் முறையின் கீழ் ஆகக் கூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு - புள்ளிப் பேறுபேறு வரிசையில் - அடிப்படையில் - பாடசாலை அனுமதி வழங்கப்பட வேண்டும்.

### பிள்ளை தொடர்பான கணிப்பீடு

பிள்ளை தொடர்பான மதிப்பீட்டுக்கு ஐம்பது புள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது. அது பின்வரும் வகையில் அமையும்:-

✱ பிள்ளையின் நுண்ணறிவுக்கு - 25 புள்ளிகள்.

✱ *பிள்ளையின் விவேகத்துக்கு - 25 புள்ளிகள்.*

### பெற்றார் தொடர்பான மதிப்பீடு

பெற்றோர் தொடர்பான மதிப்பீட்டுக்கு நாற்பது புள்ளிகள் வரை வழங்கப்படுகின்றது. இதில் பாடசாலை தொடர்பான பெற்றோரின் பங்களிப்பு, அவர்களின் கல்வித் தகைமை, அவர்களின் தொழில்சார் தகைமை ஆகியவற்றுக்குத் தனித்தனியாகப் புள்ளிகள் வழங்கப்படுகின்றன. அதன் விவரம் வருமாறு:-

✱ பாடசாலை பங்களிப்பு விடயத்தில் பழைய மாணவர் சங்கம் மற்றும் பிறவிடயங்களில் பெற்றோரின் ஈடுபாடும் முனைப்பான செயற்பாட்டு மட்டமும் கணிக்கப்பட்டு அதனடிப்படையில் கூடுதல் பட்சம் 15 புள்ளிகள் வரை வழங்கப்படும்.

✱ பெற்றோரின் கல்வித்தகைமை விடயத்தில் பெற்றோர் இருவரில் யாரேனும் ஒருவரின் தகைமை மதிப்பிடப்படலாம். ஜி.சீ.ஈ. சாதாரண தரசித்திக்கு - 8 புள்ளிகள், உயர்தரசித்திக்கு - 10 புள்ளிகள், டிப்ளோமா தாரருக்கு - 12 புள்ளிகள், பட்டதாரிகளுக்கு - 15 புள்ளிகள்.

✱ பெற்றோரின் தொழில்சார் தகுதி மற்றும் பதவி நிலைக்கு வழங்கப்படும் புள்ளி விகிதம் வருமாறு:-

அரச மற்றும் தனியார் துறைகளின் ஆரம்பநிலை ஊழியர்கள் - மூன்று புள்ளி, எழுதுநர் மற்றும் அது போன்ற தரத்தில் உள்ளவர்கள் - ஐந்து புள்ளிகள், மூன்றாம் நிலை கனிஷ்ட முகாமையாளர்கள் - ஏழு புள்ளிகள், சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் துறைசார் பதவியாளர்கள் - முற்றாகப் பத்துப் புள்ளிகள்.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் - மூன்று புள்ளிகள், மாகாணசபை உறுப்பினர்கள் - ஐந்து புள்ளிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் - ஏழு புள்ளிகள், அமைச்சர்கள் - பத்துப் புள்ளிகள்.

ஆயுதப் படையினருக்கு - ஏழு புள்ளிகள். அதேவேளை இராணுவ நடவடிக் கைப் பிரதேசங்களில் பணியாற்றும் படையினருக்கு - பத்துப் புள்ளிகள்.

### சகோதர, சகோதரிகள் பற்றிய மதிப்பீடு

அனுமதிக்கு விண்ணப்பிக்கும் பிள்ளையின் சகோதர, சகோதரிகளில் யாரேனும் ஒருவர் அப்பாடசாலையில் கல்வி கற்றால் அதற்கும் பத்துப் புள்ளிகள்.

- இவ்வாறு அந்தச் சுற்றறிக்கை வரைவு கூறுகின்றது.

முன்னர் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்ப்பதில் பாடசாலை சுற்றாடல் பிரதேசமே - ஆயிரம் மீற்றர் சுற்றாடல் பகுதியே - முக்கிய கணிப்பீட்டுத் தளமாகக் கொள்ளப்பட்டது. அதனை உயர் நீதிமன்றின் புதிய வரைவு நீக்கிவிட்டது.

அதற்குப் பதிலாக பிரதேச சபை அல்லது நகரசபை மட்டத்தில் உள்ளூராட்சி அலகின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படும்.

ஒவ்வொரு பிள்ளையும் தான் வசிக்கும் உள்ளூராட்சி சபைப் பிரதேசத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

அந்த உள்ளூராட்சி சபைப் பிரிவில் தான் அனுமதி பெற விரும்பும் பாடசாலைகளின் ஒழுங்கு விவரத்தை - வரிசைக் கிரமப்படி நான்கு பாடசாலைகளின் பெயர்களைக் குறிப்பிட்டு - ஒவ்வொரு பிள்ளை சார்பிலும் விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (சி-ப)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 17 | வியாழக்கிழமை 02.08.2007 |
| திதி : சதுர்த்தி | பின்னிரவு : 01.06 |
| நட்சத்திரம் : | பூரட்டாதி பின்னிரவு : 12.17 |
| சுபநேரம் | : 07.33 - 09.03 |
| ராகுகாலம் | : 01.33 - 03.03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தமிழ் இளைஞர்கள் வெள்ளவத்தையில் கைது

கொழும்பு,ஓக.1

நேற்றுமுன்தினம் பிற்பகல் வெள்ளவத்தைப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது தங்களின் அடையாளம் மற்றும் விவரங்களைத் தெளிவாக உறுதிப்படுத்தத் தவறிய இரு தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர் என அறிவிக்கப்படுகின்றது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த இந்த இரு இளைஞர்களும் தாங்கள் கொழும்பில் தங்கியிருப்பதற்கான காரணத்தை ஆவணங்களுடன் உறுதிப்படுத்துவார்களாயின் அவர்கள் விடுவிக்கப்படுவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## கிழக்கில் தேர்தல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருவதால் அது முக்கியமானது.

அமைதி முயற்சியில் சம்பந்தப்பட்ட தரப்பு என்ற முறையில் இத்தகைய அறிவிப்புகளை உறுதியான முறையில் நீங்கள் கையாள்வீர்கள் என நம்புகிறோம்.

ஜனநாயகத்தை மீள நிலை நிறுத்தும் முயற்சியை பெரும் இரத்தக்களரி ஏற்படும் எனத் தெரிவித்து எச்சரித்துத் தடுக்க முயல்வது பெரும் துன்பியல் செயற்பாடாகும்.

இறுதியாக, கிழக்குப் பிரஜைகள் தங்களின் பிராந்தியத்துக்கான அரசியல், நிர்வாக அதிகாரிகளைத் தெரிவு செய்ய வாய்ப்புக் கிட்டியிருக்கும்போது, அதைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் உறுதி பூண்டிப்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

அத்தகைய செயற்பாட்டில் விடுதலைப்புலிகள் ஈடுபடுவதைத் தடுப்பதற்கு இயன்ற நடவடிக்கைகளை எடுக்கவும்.-

ஜனநாயக நடைமுறையில் ஈடுபட விரும்புகின்ற - இயலுகின்ற - நமது ஆதரவாளர்கள் மூலம், விரைவில் எல்லா மட்டங்களிலும் நடைபெறும் தேர்தல்களிலும் பங்குபற்றுமாறு புலிகளைத் தூண்டவும் -

உங்களின் முழுப் பலத்தையும் பிரயோகிக்கும்படி வேண்டுகிறேன்.

இத்தேர்தல்கள் தொடர்பான மேலதிக விவரங்களை அறியத் தாங்கள் விரும்பினால் அவை குறித்து தங்களுடன் கலந்தாலோசனை செய்ய மகிழ்வுடன் காத்திருக்கிறேன் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கடிதம் கொழும்புக்கான நோர் வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் மற்றும் ஏனைய இணைத்தலைமை நாடுகளின் கொழும்புத் தூதர்களுக்கும் அனுப்பி வைக் கப்பட்டுள்ளது. (சி)

## நகரில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் 141/4, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த தம்பிமுத்து அற்புதராஜா(வயது42) என்பவரே கொல்லப்பட்டவர் என அடையாளம் காணப்பட்டது.

இருவரின் மரணங்கள் குறித்து யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடங்களில் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அதேவேளை -

திருநெல்வேலி சிவன் வீதியில் நேற்று மாலை 5 மணியளவில் இளை ஞர் ஒருவர் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

சிவன்வீதி, திருநெல்வேலியைச் சேர்ந்த பாலசிங்கம் சுரேஷ்(வயது 21) என்பவரே காயமடைந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் அவரை தலை யில் சுட்டுவிட்டுத் தப்பிவிட்டனர்.

அவர் யாழ்.ஆஸ்பத்திரி அவசர சிகிச்சைப் பிரிவில் முதலில் அனுமதிக் கப்பட்டு பின்னர் 24ஆம் வார்ட்டுக்கு மாற்றப்பட்டிருந்தார். (அ-1-50-68-202)

## இராணுவத் தளபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடமையாற்றும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளைச் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பின் போது பாதுகாப்பு நிலைவரம் தொடர்பாக விரிவாகக் கேட்டறிந்தார் என்று கூறப்பட்டது. (சி)

## கிழக்கில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைப்புகளுக்கு மின் அஞ்சல் மூலம் ஏற்கனவே அனுப்பப்பட்டிருந்தது.

முழு விவரங்களையும் சமர்ப்பிக்கத் தவறும் அமைப்புகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த மின் அஞ்சலில் அச்சுறுத்தப்பட்டிருந்து.

இதேசமயம்-

தொண்டு நிறுவனப் பணியின் பெயரால் விடுதலைப் புலிகள் கிழக்கில் மீண்டும் ஊடுருவலாம் என்று எச்சரித்துள்ள அரசு, அதன் காரணமாக தொண்டு நிறுவனப் பணிகளைக் கண்காணிக்கும் பொறுப்பைக் கிழக்கில் உள்ள படை அதிகாரிகளின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருக்கின்றது.

கிழக்கில் தொண்டர் நிறுவனப் பணிகள் அரச அதிகாரிகளுக்கு மேலதிகமாக, பிரதேச இராணுவ அதிகாரிகளினதும் நேரடிக் கண்காணிப்புக்கும் அதிகாரத்துக்கும் உட்பட்டவையாகவே இயங்க வேண்டும் என்றும் அரசு பணித்திருக்கிறது.

இதேசமயம், இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் பல தொண்டர் அமைப் புகள் ஆயுதக் குழுக்களின் அச்சுறுத்தலுக்கும், நேரடித் தலையீட்டுக்கும் இலக்காகி வருகின்றன என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பின்னணியிலேயே பல தொண்டர் அமைப்புகள் மனிதாபிமானப் பணிகளை அங்கு தற்காலிகமாக வேனும் இடைநிறுத்துவது குறித்து ஆலோசித்து வருகின்றன என்று கூறப்படுகின்றது.

கிழக்கில் மனிதநேயப் பணியாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்ட நிலையில் தமது பணியாளர்களின் உயிர்ப்பாதுகாப்பு மற்றும் தத்தமது நிறுவனங்களின் பிற தலையீடுகளற்ற சுதந்திரச் செயற்பாடு ஆகியவை குறித்து பல தொண்டர் அமைப்புகள் அதிகம் கவனம் எடுத்து, அது விடயம் குறித்து ஆழமாக ஆராய்ந்து வருகின்றன என்றும் கூறப்படுகின்றது. (சி)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் பணி செய்வதாகக் கூறிக்கொண்டு தந்திரோபாயமான முறையில் புலிகள் இயக்கத்தினர் யாழ். குடாநாட்டிற்குள் நுழைந்ததன் பின்னர் குடாநாட்டில் பலர் காணாமற்போயுள்ளதை சுட்டிக்காட்டிய இம்மக்களின் துயரங்களைக் கேட்டறிந்து கொண்ட அமைச்சர், இம்மக்களது உணர்வு களைத் தான் அறிந்து கொள்வதாகவும் உயிரிழப்புகள் மீளப் பெறமுடியாதவை என்பதை மனதில் கொண்டே இது தொடர் பாகத் தான் செயற்பட்டு வருவதாகவும் இவ்விட யம் தொடர்பில் உடனடி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது என்றும் கூறியதுடன் கால அவகாசம் தரும்படியும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் இவர்களது பிரச்சினை தொடர்பில் தொலைபேசி மூலம் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு விளக்கிக் கூறினார். இதன் பயனாக காணாமற்போனவர்கள் தொடர்பில் விரைவில் நல்லதொரு தீர்வு கிடைக்கும் என நம்பிக்கை தெரிவித்துள்ள அமைச்சர், யாழ். குடாநாட்டில் காணாமற்போனவர்கள் தொடர்பில் விவரங்களைத் திரட்டி வருகின்றார். - என்றுள்ளது. (அ-1)

## ஒக்ரோபரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீராக்க மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து எடுத்துவரப்பட்டுள்ள இரு ஜெனரேட்டர்களை சுன்னாகத்தில் பொருத்தி மின் வெட்டு நேரத்தைக் குறைப்பதற்கு மின்சார சபை நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் அறியவந்தது. (அ-1)


பௌதிகவியல் N.பாபு
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2009 Tue.,Thur 3.15-4.15
A/L 2008 Tue.,Thur. 3.15-4.15
ஆரம்பம்: 02.08.2007 (Thur. 3.15)
நாவலர் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

கணக்கீடு P.பகீரதன்
A/L 2008 பங்குடமை Tue.,Wed.,3.30 -5.00 pm
ஆரம்பம் 01.08.2008 Wed. 3.30 p.m.
Business College (மத்திய கல்லூரிக்கு அருகில்)

MY COMPUTER தமிழ் கணனி மாத இதழ்
சகல இடங்களிலும். வெளியீடு: SPEED IT net. 021 4591871.


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சுப்பையா இராசேந்திரம்

கண் மகிழ 30.06.1933

கண் நெகிழ 12.08.2006

கனவுகளை எல்லாம் நனவாக்கிய
கலங்கரை விளக்கே!
ஆண்டு ஒன்று ஆனாலும்
அகலவில்லை உங்கள் நினைவு.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை வீதி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய். (63103) - குடும்பத்தினர்.

## ஈரவிழிகளுடன் ஓராண்டு



சிதம்பரநாதர் காராளசிங்கம் — காராளசிங்கம் தவயோகநாயகி

| மலர்வு | உதிர்வு | மலர்வு |
|---|---|---|
| 08-09-1954 | 11-08-2006 | 14-04-1955 |

குடும்பத்தின் குல
விளக்குகளே!
அணையாத தீபங்களே!
பொட்டிழந்து பொலிவிழந்து
விதவை என்ற பட்டமின்றி
மங்கலமாய் செல்வதற்காய்
மக்கள் நாம் கலங்கியழ
தன்னந்தனியே எம்மை
தத்தளிக்க விட்டுவிட்டு
இருபேரும் ஒன்றாக
இறைவனடி சென்றீர்களோ.

இடைக்குறிச்சி, வரணி. (63093) - பிள்ளைகள்.


NEW A.A.C. இன் வருகை
அளவையியலின் சிகரம் S.S.மனோகரன்
அளவையியல் வகுப்புகள் ஆரம்பம்
வியாழன் 4p.m 2008 (02.08.07) 5p.m 2009
நிர்வாகம் NEW A.A.C. K.K.S. Road, Chunnakam

விசேட விடுமுறை வகுப்புகள் A/L 2008 & 09
B.st. Mr.பசில்
Acc. Mr.தவா
Econ. Mr.கஜீதரன்
PHY Mr.வர்ணன்
CHE Mr.நிரோஜன்
C/Ma Mr.ஜெயக்குமார்
SHAMROCK J/Eachchamoddai Rd.

கணக்கீடு
A/L 2008 கர்ப்பனி
ஆரம்பம் நாளை 3.15 p.m.
A/L 2009 வங்கிக்கணக்கிணக்கக் கூற்று
ஆரம்பம் வெள்ளி 4p.m.
விடுமுறை கால நேர அட்டவணை அலுவலகத்தில்
S.தவா B.Com.(Hons) [Acc. Spl.]
SHARMROCK ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.

கணக்கீடு
A/L 2008 கர்ப்பனி
ஆரம்பம் இன்று 3.30 p.m.
A/L 2009 வங்கிக்கணக்கிணக்கக் கூற்று
ஆரம்பம் இன்று 5p.m.
விடுமுறை கால நேர அட்டவணை அலுவலகத்தில்
S.தவா B.Com.(Hons) [Acc. Spl.]
NIRU Tution Centre Kondavil

பால... சகோதரர்களின் வாழ்த்துக்கள்
என்னிடம் படித்த மாணவர்களிற்கும் A/L பரீட்சைக்குத் தோற்றும் வர்த்தகப் பிரிவு மாணவர்களிற்கும் சிறந்த பெறுபேறுகளினைப் பெற்று உயர்கல்வி செல்ல அன்புகனிந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.
Mr. BALAVASAN(கணக்கீடு ஆசிரியர்)
3/11-QUEENA ROAD,
WESTMEAD, NEW-2145, AUSTRALIA.
T.Ph: 0061296875347
H.Ph: 0061401942932
E.Mail : VASAN_MOHANA @ YAHOO.COM
Mr.BALAKAJAN T.P:0777-529113 0777-113880 (63036)
பிரத்தியேக வகுப்பு கணக்கீடு A/L 2008, 2009 & O/L 2007/ AAT

மாணவருக்கான விடுமுறைக்கால விசேட பிரிவு
GIT - ICT
பதிவுகள் 03.08.2007 முன் நேரில்
MGS Supported by UNDP/JRRP மேலதிக விபரங்களுக்கு நேரில் 324, Palaly Road, Jaffna.


## காணவில்லை

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்தியரான இ.மணிவாசகன் ஆகிய எனது 160-2414 இலக்கம் கொண்ட லான்சர் மொடல் ஹொண்டா மோட்டார் சைக்கிளை 27.07.2007 அன்று காலை வைத்தியசாலை வளாகத்திலிருந்து காணவில்லை.

இந்த மோட்டார் சைக்கிளின் விவரம்

Engine Number - C50E - 9450181
Chasis Number - C50 9450165
நிறம் - நீலம்

இவ்வண்டியின் விவரம் அறிந்தவர்கள் கீழ் காணும் முகவரிக்கு அறிவிக்கவும்.

இருதய சிகிச்சை பிரிவு,
போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021222 2261, 021 222 2301

## மரண அறிவித்தல்கள்

### பேதுறு அருளப்பு



நவாலி வடக்கு, வரகுசாட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறு அருளப்பு அவர்கள் நேற்று (31.07.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் பேதுறு மற்றும் கண்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற வேலாயுதம் சின்னத்தங்கத்தின் மருமகனும் பாக்கியத்தின் அன்புக்கணவரும் பேணாட் சுதர்சன், எட்வேட் ஜெபர்சன், ஜெனாட் நிரோசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஜனி, தர்மினி ஆகியோரின் மாமனும் ஜெனார்த்தனனின் அன்புப் பேரனும் வின்சன், ஞானமணி, யசிந்தா ஆகியோரின் சகோதரனுமாவார். அன்னாரின் இறுதி ஆராதனைகள் நாளை (02.08.2007) வியாழன் காலை 9 மணிக்கு திரு இருதய ஆண்டவர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் வழுக்கையாறு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவாலி வடக்கு,
நவாலி. (63104)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி M.T. சொலமன்ஸ் (திலகா)

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

இல. 67, கச்சேரி - நல்லூர் வீதி, சுண்டுக்குழியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமான திருமதி மாகிறட் திலகவதி சொலமன்ஸ்(ஓய்வுபெற்ற ஆசிரியர், ஹற்றன், புத்தளம், அம்பாறை, யாழ்ப்பாணம் மங்கையர்க்கரசி வித்தியாலயம், நல்லூர்) 27.07.2007 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் W.J.சொலமன்ஸ் (ஓய்வுபெற்ற பிரதம வன இலாகா அதிகாரி) அவர்களின் அன்பு மனைவியும், றொனி, ஹட்சன், ஹரல்ட் ஆகியோரின் அன்புத் தாயாரும் லக்ஷி, தேவிகா, ஆன் ஆகியோரின் அன்பு மாமியும் ஜறீன், திமோத்தி, கேவின், பெஞ்சமின், றெனோல்ட், ஜோயல், அலிஷா ஆகியோரின் பேர்த்தியுமாவர்.

அன்னாரின் நல்லடக்கம் Highland Funeral Centre, 3280 Shappard Ave East, Scarborough, Canadaவில் இன்று(01.08.2007) புதன் கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

67, கச்சேரி - நல்லூர் வீதி,
சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (63107)

தகவல்:
திருமதி ம.சோமசுந்தரம்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.08.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org